AUGUST 19, 2020
WEDNESDAY
VOL: 006/076
RS. 10.00
PROVINCIAL

Find us on facebook/tamilmirror
Follow us on tamilmirror
epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ்Mirror






நான்கு நாள்களுக்கு 4 வலயங்களில்

# ஒரு மணிநேரம் மின் துண்டிப்பு

நாடளாவிய ரீதியில், நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலம் மின்சாரம் துண்டிக்கப்படுமென அறிவித்துள்ள இலங்கை மின்சார சபை, இந்த மின்துண்டிப்பு நான்கு நாள்களுக்கு மட்டுமே அமல்படுத்தப்படுமென அறிவித்தல் விடுத்துள்ளது.

நேற்று (18) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த மின்துண்டிப்பு, நாடளாவிய ரீதியில் நான்கு வலயங்களாக பிரிக்கப்பட்டு, நான்கு சந்தர்ப்பங்களில் அமல்படுத்தப்படுமென, இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் கீர்த்தி கருணாரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ‘கைவிலங்கை உடைத்து வெளியே வருவேன்’


■ க. விஜயரெத்தினம்



நாடாளுமன்ற உறுப்பினரான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும், முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்கு, நேற்று (18) அழைத்துவரப்பட்டார்.

தொடர்ச்சி P2

## நுரைச்சோலை செயலிழந்தது




நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையம் மீண்டும் செயலிழந்துவிட்டது.

நேற்றுமுன்தினம் திடீரென ஏற்பட்ட மின் தடை காரணமாகச் செயலிழந்திருந்த, மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள், வழமைக்குத் திரும்பவில்லையெனத் தெரிவித்த இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன, எவ்வாறாயினும், இந்த மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் வழமைக்குத் திருப்புவதற்கு இன்னும் நான்கு நாள்கள் ஆகும் என்றார்.

தொடர்ச்சி P2

## மின்சாரம் தடைபட்டது ஏன்?; 7 நாள்களுக்குள் அறிக்கை



முழு நாட்டையும் பகலிலேயே இருட்டாக்கி, தடைபட்டிருந்த மின்சாரம், நேற்று முன்தினம் இரவே, வழமைக்குத் திரும்பிவிட்டதெனத் தெரிவித்த மின்சக்தி அமைச்சு, மின் விநியோகம் தடைப்பட்டமை தொடர்பிலான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட 9 பேர் அடங்கிய குழு, 7 நாள்களுக்குள் அறிக்கையிடுமென்றது.

பேராசிரியர் ராஹூல அதலகேயின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள

தொடர்ச்சி P2

## முதல் அமர்வில் பங்கேற்க பிள்ளையானுக்கு அனுமதி

■ எம்.எஸ்.எம். நூர்தீன், ரீ.எல். ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய (54,198) விருப்பு வாக்குகளைப் பெற்ற, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர், ‘பிள்ளையான்’ என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு, நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் பங்கேற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிள்ளையானின் சட்டத்தரணிகளான யு.ஏ. நஜீம், ஏ. உவைஸ்,

தொடர்ச்சி P2

## ‘ரத்தரன்’ செய்தி பொய்

தென்மாகாணத்தின் முன்னாள் உறுப்பினர் ‘ரத்தரன்’ என்றழைக்கப்படும் கிரிஷாந்த புஷ்பகுமார என்பவர் தொடர்பில் வெளியான செய்தி, போலியானதென, அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தனது கடமைகளை நேற்று (18) பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிலையில், விளையாட்டுத்துறை அமைச்சுக்கு நேற்று முன்தினம் (17) சென்றிருந்த அவர்,

தொடர்ச்சி P2

## ‘நடுவில் பிளாஸ்டர் ஒட்டுவது சரிவராது’



முதன்முறையாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்ட நாமல் ராஜபக்ஷ, விளையாட்டு சட்டத்தை முழுமையாகத் திருத்தவேண்டும். அச்சட்டத்தில், ஆங்காங்கே, இடைநடுவில் அவ்வப்போது ‘பிளாஸ்டர்’ ஒட்டுவது சரிவராது என்றார்.

இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட நாமல் ராஜபக்ஷ, தனது கடமைகளை நேற்று (18) பொறுப்பேற்றுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## ‘2/3ஐ இழக்கச் செய்ய சு.கவுடன் பேசுவோம்’



அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்கக் கூடாதெனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இல்லாமல் செய்வதற்கு, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் பேசுவோம் என்றார்.

தொடர்ச்சி P2

## சபைத் தலைவர் தினேஷ்; முதற்கோலாசான் ஜோன்ஸ்டன்



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் புதிய சபைத் தலைவராக அமைச்சர் தினேஷ் குணவர்தனவும் அரசாங்க முதற்கோலாசானாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்திலும், மேற்குறித்த இருவருக்கே இந்தப் பதவிகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்தில் புதிய பதவிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ ஆகியோருக்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

## அமரர் தொண்டமானின் பூர்வீக இல்லத்தில் தீ



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்குச் சொந்தமான கொத்மலை, வேவண்டனில் உள்ள பூர்வீக இல்லத்தில், நேற்று (18) அதிகாலை 2.30 மணியளவில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

நுவரெலியா மாநகர சபை, ஹட்டன்- டிக்கோயா நகர சபை ஆகியவற்றின் தீயணைப்பு

தொடர்ச்சி P2

## பௌத்த தேரரை தேடி வேட்டை



கண்டி அஸ்கிரிய மகா விஹாரையின் வளாகத்திலுள்ள பண்டைய மதிப்புமிக்க, பழங்காலக் கட்டடமொன்றுக்குச் சேதத்தை விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், எங்கள் மக்கள் சக்தி கட்சியின் செயலாளர் எனக் கூறப்படும் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சி P2

1 பில்லியன் ரூபாய் பெறுமதியான

## போலி நாணயத் தாள் பொதிகளுடன் மூவர் கைது

■ எப்.முபாரக்



போலியாகத் தயாரிக்கப்பட்ட நாணயத்தாள்கள் அடங்கிய 128 பொதிகளுடன், மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முல்லேரியா, கல்வான பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் அடங்கிய குழுவால், காரொன்று

தொடர்ச்சி P2

சிங்கராஜா வன விவகாரம்:

## வீதி அபிவிருத்தியை நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு



சிங்கராஜா வனம் மற்றும் உலக பாரம்பரிய தளத்துக்கு அண்மித்ததாக முன்னெடுக்கப்படும் வீதி அபிவிருத்தி திட்டங்களை தற்காலிகமாக நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஒரு மணிநேரம் மின் துண்டிப்பு

அதனடிப்படையில், மாலை 6 மணிமுதல் இரவு 7 மணிவரை, இரவு 7 மணி முதல் இரவு 8 மணிவரை, இரவு 8 மணி முதல் இரவு 9 மணி முதல் இரவு 10 மணிவரையிலும் நாடளாவிய ரீதியில், பல பிரதேசங்களில் மின்சாரம் துண்டிக்கப்படும். மின் பிறப்பாக்க கட்டமைப்பில் மின்சார உற்பத்தி வழமைக்கு திரும்பும் வரையிலும் நான்கு நாள்களுக்கு மாத்திரம் மின்சார விநியோகத்தைத் துண்டிக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

# நுரைச்சோலை செயலிழந்தது

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்குள் காணப்படும் தானியங்கி குளிர்மையாக்கல் இயந்திரத்தின் செயற்பாடுகள், திடீரென ஏற்பட்ட மின் தடை காரணமாகச் செயலிழந்தன என்றார்.

இதனால், அந்த மின்னுற்பத்தி நிலையத்தில் உற்பத்திச் செய்யப்படும் 810 மெகாவோட் மின்சாரம், தேசிய மின்சார கட்டமைப்புக்குக் கிடைக்காமல் போயுள்ளதோடு, இந்நிலைமை காரணமாக, நாட்டின் அவசர மின் விநியோகச் செயற்பாடுகளில் தடங்கல்கள் ஏற்படக்கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள், வழமைக்குத் திரும்புவதற்கு நான்கு நாள்கள் செல்லும் என, மின்சார சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

# மின்சாரம் தடைபட்டது ஏன்?; 7 நாள்களுக்குள் அறிக்கை

குழுவே, மின் விநியோகம் தடைப்பட்டமை குறித்து ஆராய்ந்து 7 நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமெனத் தெரிவித்த மின்சக்தி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, அந்தக் குழுவின் முதற் கூட்டம் நேற்று (18) காலை 8.30 மணிக்கு நடைபெற்றது என்றார்.

இதேவேளை, மின் விநியோகம் துண்டிக்கப்பட்டமை தொடர்பில் 3 நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபையிடம் கோரியுள்ளதாகத் தெரிவித்த இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித்த குமாரசிங்க, இந்த விடயம் தொடர்பில், முழுமையான அறிக்கையை ஒரு மாதத்துக்குள் வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது என்றார்.

"தடைப்பட்ட மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்பினாலும், தொழில்நுட்பக் கோளாறு தொடர்பில் தொடர்ந்தும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன்றன" என அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சுலக்‌ஷன ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதால், நீர் விநியோகத்துக்கும் இடையூறு ஏற்பட்டிருந்தது. அதனை வழமைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் நீர் விநியோகம் வழமைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனினும், நீர் விநியோகம் துண்டிக்கப்பட்ட பகுதிகளுக்கு பௌசர் மூலம் நீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அச்சபை தெரிவித்துள்ளது.

மின்பிறப்பாக்கி கட்டமைப்பில் நேற்று முன்தினம் (17) நண்பகல் 12.35 மணியளவில் கோளாறு ஏற்பட்டதைத் தொடர்ந்து, நாடளாவிய ரீதியில் மின் விநியோகம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2016ஆம் ஆண்டின் பின்னர் நாடளாவிய ரீதியில் முதன்முறையாக நேற்று முன்தினம் (17) மின்சார விநியோகத்துக்குத் தடை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 'கைவிலங்கை உடைத்து வெளியே வருவேன்'

நீதிமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் போடப்பட்டிருந்தன. அத்துடன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவாளர்கள், அங்கு திரண்டிருந்தனர்.

நாடாமன்றத்துக்கு நாளை (20) செல்வதற்கான அனுமதியை கோரி, தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் மனுமீதான விசாரணைக்காக, சிறைச்சாலையிலிருந்து அழைத்துவரப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.



இந்நிலையில், நீதிமன்ற வளாகத்தில் குழுமியிருந்த ஊடகவியலாளர்களை பார்த்து, கை விலங்குகளை உடைத்துக்கொண்டு, விரைவில் வெளியேவந்து அனைவருடனும் பேசுவேன் என்றார்.

# 'ரத்தரன்' செய்தி பொய்

விளையாட்டுத்துறை அமைச்சின் பெயர்ப் பலகையில் காணப்பட்ட தமிழ்ப் பிழையைத் திருத்துமாறு பணித்தார்.

இந்நிலையில், இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷவின் தனிப்பட்ட ஒருங்கிணைப்புச் செயலாளராக, 'ரத்தரன்' நியமிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி சமூக வலைத்தளங்களில் உலாவின. அதையே, அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷவின் ஊடகப்பிரிவு மறுத்துள்ளது.

# 'நடுவில் பிளாஸ்டர் ஒட்டுவது சரிவராது'

அதன்போது, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ உள்ளிட்ட குடும்ப அங்கத்தவர்கள் பிரசன்னமாய் இருந்தனர்.

அங்கு கருத்துரைத்த அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ, "1973ஆம் ஆண்டு விளையாட்டு சட்டம்தான், நான்கு தடவைகள் திருத்தப்பட்டு, தற்போதிருக்கின்றது. நான் நினைக்கின்றேன், புதிய விளையாட்டு சட்டமொன்றை நாட்டுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். முழுமையான திருத்தங்களை மேற்கொள்ளாது. இடைநடுவில், ஆங்காங்கே பிளாஸ்டர்களை ஒட்டுவது உசிதமானது அல்ல" என்றார்.

"ஜனாதிபதி, பிரமரின் ஆலோசனையின் பிரகாரம், சட்டத்தரணிகள் சங்கம், சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு ஆகியவற்றுடன் பேச்சுவார்தை நடத்தி, விளையாட்டுச் சட்டத்தை நாங்கள் புதிதாக உருவாக்க வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு, விளையாட்டை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்லவேண்டும்" என்றார்.

மிகப்பழைய விளையாட்டுச் சட்டத்தை வைத்துகொண்டு நாமிருக்கின்றோம். அந்த ஒழுங்கு விதிக்குள் எம்மால் இன்னுமிருக்க முடியாது. எங்களுடைய இளைஞர் யுவதிகளுக்குத் தேவையான, உலக வேலைவாய்ப்புச் சந்தைக்குப் பொருத்தமான இளைஞர்களை நாங்கள் உருவாக்கவேண்டும் எனத் தெரிவித்த அவர், அதற்குத் தேவையான தொழில் பயிற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

தொழிற்றுறை பயிற்சி சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களாக இருக்கலாம்; கல்வி மறுசீரமைப்பாக இருக்கலாம்; அத்துடன், ஒழுக்கம், கலாசாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு மேற்படி விடயங்களை, எதிர்காலத்தில் அமைச்சின் மூலம் செயற்படுத்த முடியுமென நம்புகின்றேன் என்றார்.

# முதல் அமர்வில் பங்கேற்க பிள்ளையானுக்கு அனுமதி

திருமதி மங்கேஸ்வரி சங்கர் ஆகியோரால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில், நேற்று (18) தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் மனுவை ஆராய்ந்த, மட்டக்களப்பு மேல் நீதிமன்ற மேலதிக நீதிபதி டி. சூசை தாசன், அதற்கான அனுமதியை வழங்கியதுடன், முதலாவது நாடாளுமன்ற அமர்வுக்கு அழைத்துச் செல்லுமாறு, மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு, நாளை (20) காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. முதலாவது கூட்டத்தொடர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவால், அன்றையதினம் மாலை 3 மணிக்கு ஆரம்பித்துவைக்கப்படும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கத்தின் கொலை வழக்கில், கைதுசெய்யப்பட்ட பிள்ளையான், வழக்கின் 3ஆவது சந்தேக நபராகப் பெயர் குறிக்கப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், மட்டக்களப்பு சிறைச்சாலையில் நீண்டகாலமாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன், வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது, சபாநாயகர் கலரிக்கு முதன்முறையாக வந்திருந்தார்**

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன், வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது, சபாநாயகர் கலரிக்கு முதன்முறையாக வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமரர் தொண்டமானின் பூர்வீக இல்லத்தில் தீ

படைப்பிரிவுக்குச் சொந்தமான தீயணைப்பு இயந்திரங்கள் அடங்கிய வாகனங்களைக் கொண்டு, தீப்பரவலை வியாபிக்கவிடாது, முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும், அந்த வீட்டின் கூரை தீக்கிரையாகி முழுமையாகச் சேதமடைந்துவிட்டது என, கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தைக் கேள்வியுற்றதும், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வனான இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

தீப்பரவலுக்கான காரணம், இதுவரையில் கண்டறியப்படவில்லை எனத் தெரிவித்த கொத்மலை பொலிஸார், சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தனர்.

தீப்பரவலால், அந்தப் பூர்வீக இல்லத்திலிருந்த சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பிலான விவரம் இன்னும் மதிப்பிடப்படவில்லை.

# வீதி அபிவிருத்தியை நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு

சிங்கராஜா வனத்தின் நடுவே, வீதியொன்று அமைக்கப்பட்டு வருவதால், சிங்கராஜா வனத்துக்கும் அதனை அண்மித்த பாரம்பரிய தளங்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருவதாக, பொதுமக்களும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகளும் முறையிட்டு வருகின்றன.

இந்த வனத்தின் இயற்கை தன்மையை அழிக்கும் வகையில், வீதி அமைக்கப்பட்டு வருவதாகவும் அதற்காக, கன ரக இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் இயற்கை சுற்றாடல் அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

எனவே, இவ்விடயத்தில் அவதானம் செலுத்தி, காடழிப்பை தடுத்து நிறுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையிலே, அச்செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணித்துள்ளார்.

# போலி நாணயத் தாள் பொதிகளுடன் மூவர் கைது

நேற்றுமுன்தினம் (17) சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, அக்காரில் இருந்த மூவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

5,000 ரூபாய் நாணயத்தாளில் ஒருபக்கத்தை மட்டுமே அச்சடித்து, அவ்வாறான நாணயத்தாள்களின் இரண்டு பக்கங்களும் கீழேயும் மேலேயும் இருக்கும் வகையில், அந்த 128 பொதிகளும் தயாரிக்கப்பட்டு, பொதியிடப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், ஜா-எல, அங்கொட, முல்லேரியா ஆகிய இடங்களை வசிப்பிடங்களாகக் கொண்டவர்கள் எனத் தெரிவித்த முல்லேரியா பொலிஸார், அவர்கள் பயணித்த கார், பொலிஸாரின் பொறுப்பில் கொண்டுவரப்பட்டுள்ளது என்றனர்.

அந்த 128 பொதிகளிலும் இருந்த போலி நாணயத்தாள்களின் பெறுமதி ஒரு பில்லியன் (100 கோடி) ரூபாயென மதிப்பிடப்பட்டுள்ளது என்றனர்.

இதேவேளை, திருகோணமலை - மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட



**17 போலி நாணயத்தாள்களை வைத்திருந்த 21 வயது இளைஞனை, இம்மாதம் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மூதூர் நீதவான் எம்.எஸ்.எம். சம்சுதீன், நேற்று முன்தினம் (17) உத்தரவிட்டார்**

பகுதியில் ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய 17 போலி நாணயத்தாள்களை வைத்திருந்த 21 வயது இளைஞனை, இம்மாதம் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மூதூர் நீதவான் எம்.எஸ்.எம். சம்சுதீன், நேற்று முன்தினம் (17) உத்தரவிட்டார்.

# '2/3ஐ இழக்கச் செய்ய சு.கவுடன் பேசுவோம்'

இம்முறை அமைச்சரவை தெரிவில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பின்தள்ளப்பட்டுள்ளனர். ஆனால், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

ஊடகமொன்றுக்குக் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அவர், "இவ்வாறான நிலைமையின் கீழ், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியினர், அரசாங்கத்துக்குள் எவ்வாறு இருக்கின்றனர்" எனக் கேள்வியெழுப்பினார்.

19ஆவது திருத்தத்தில் கையை வைப்பதற்கு அரசாங்கத்துக்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாதெனத் தெரிவித்த அவர், அதற்காக, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியுடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்றார்.



# பௌத்த தேரரை தேடி வேட்டை

சுமார் 700 வருடங்கள் பழைமை வாய்ந்த அந்தக் கட்டடத்துக்கு, மேற்படி தேரர் சேதம் விளைவித்துள்ளார் என, விஹாரையின் விகாராதிபதி கலங்குட்டியின் ராகுலா தேரர், கண்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே, மேற்படி விசாரணைகள் முன்னெடுக்கப்படு கின்றனவென கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த முறைப்பாட்டுக்கு அமைய, சேதமாக்கப்பட்டதாகக் கூறப்படும் அந்தப் பழைமை வாய்ந்த கட்டடத்தின் பண்டைய மதிப்புத் தொடர்பில், தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அறிக்கையொன்றையும் பொலிஸார் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், தலைமறைவாகியிருக்கும் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கைது செய்வதற்கு, பொலிஸ் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டு ள்ளனவென, மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.



இலங்கையின்

# ‘பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு அமெரிக்கா ஒத்துழைக்கும்’

இலங்கையின் பொருளாதார, வணிக, நிர்வாக, பாதுகாப்புச் செயற்பாடுகளில் ஒத்துழைத்துச் செயற்பட விரும்புவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் எலெய்னா டெப்லிஸ் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் தொடர்பில் கலந்தாலோசிக்கும் நோக்கில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் எலெய்னா டெப்லிஸ், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் (17) சந்தித்துக் கலந்துரையாடினார்.



தனித்துப் பாரிய வெற்றியை பெற்றுக்கொண்டமைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு, தூதுவர் எலெய்னா டெப்லிஸ் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார்.

அத்தோடு, இம்முறை நாடாளுமன்ற தேர்தல் நீதியான முறையில் நடைபெற்றுள்ளதெனச் சுட்டிக்காட்டியிருந்த அவர், முன்னைய ஆட்சியை மக்கள் புறக்கணித்துள்ளதாக தெரிகின்றதெனவும் கூறியுள்ளார்.

அதன்படி, புதிய அரசாங்கத்துடன் ஒற்றுமையாக செயற்படுவதற்கு அமெரிக்கா எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதனையடுத்து அவருடைய கேள்விகளுக்குப் பதிலளித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கொவிட் - 19 வைரஸ் பரவல் காரணமாகக் பின்னடைவைச் சந்தித்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் கொவிட்-19 பரவலை அரசாங்கம் கட்டுப்படுத்தியமை பெரும் சாதனையெனக் கூறிய தூதுவர் எலெய்னா டெப்லிஸ், இலங்கைக்குள் தனியார் துறை தொழில்வாய்ப்புகளைப் பலப்படுத்துவதற்கு அமெரிக்கா கைகொடுக்கும் எனவும் உறுதியளித்துள்ளார்.

# ‘கல்வி மேம்பாட்டுக்காக சகல தரப்புகளுடனும் ஆலோசிப்போம்’

■ இக்பால் அலி

கல்வியை மேம்படுத்துவதுத் தொடர்பில், சம்பந்தப்பட்ட துறை சார் அனைத்துத் தரப்பினரின் ஆலோசனையை பெற்றே சகல கல்வி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று, கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் நாட்டின் கல்வித்துறையின் முன்னேற்றம் தொடர்பாக ஆளுநர்களுடனான கலந்துரையாடல் (17) நடைபெற்றது.



இதன்போது பாடத்திட்டத்துடன் வேலைவாய்ப்புகளுக்குக் காணப்படும் இணைப்புகள், கல்விச் செயற்பாட்டில் வெவ்வேறு கட்டங்களில் தொழிற்கல்வித் திட்டங்களை உருவாக்குதல், கொவிட் -19 நிலைமைகளின் போது இணையக் கல்வித் திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுப்பது என்பவை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

அங்குக் கருத்துரைத்த அமைச்சர்,

பாடசாலை அதிபர்கள், பெற்றோர், மாணவர்கள், அரச அதிகாரிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏனைய துறைசார் அமைப்புகளை ஒன்றிணைத்து, நடைமுறையில் காணப்படும் பாடத்திட்டங்கள், கற்பித்தல் முறைகளில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்களுக்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் செயற்திட்டங்களை முன்னெடுப்பதுத் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்படும் என்றார்.

அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களை செயற்படுத்தும் போது கீழிருந்து மேல்நோக்கிப் பயணிப்பது அவசியம் என்பதால், தீர்மானங்களை மேற்கொள்ளும் முன்னர் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரினதும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவது அவசியம் என்றார்.

# ‘கொரியாவிலிருக்கும் இலங்கையர்கள் இரு மாதங்களுக்குள் அழைத்துவரப்படுவர்’

கொரிய நாட்டுக்குத் தொழில் நிமித்தம் சென்று, அவர்களுக்கான சேவை ஒப்பந்தக் காலம் முடிந்தும் நாடு திரும்ப முடியாமல் அங்கு சிக்கிக்கொண்டுள்ள இலங்கையர்கள் 1,600 பேரையும் இரு மாதங்களுக்குள் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படுமென தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொவிட் - 19 பரவல் காரணமாக நாடுகளுக்கிடையிலான விமான சேவைகள் முடங்கியதால் மேற்படி இலங்கையர்கள் கொரிய நாட்டில் பல மாதங்களாகத் தங்கியிருக்கும் நிலை காணப்படுவதாகவும், மேற்படி தரப்பினரை மீள அழைத்து வரும்வரை, அடுத்த கட்டமாக கொரியாவுக்குத் தொழிலுக்காக செல்லவுள்ள இலங்கையர்களை அனுப்ப முடியாத நிலைமை காணப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



அதனால் மேற்படி இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வந்த பின்னர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பயிற்சி நிலையத்தில் அவர்களைத் தனிமைப்படுத்த உள்ளதாகவும், அவர்களுக்கான உணவு உள்ளிட்ட ஏனைய வசதிகளைச் செய்துகொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றார்.

அதற்கமைய கொரியாவில் தங்கியிருக்கும் இலங்கையர்களை ஸ்ரீ லங்கன் விமான சேவையின் மூலம் இரு மாதங்களுக்குள் நாட்டுக்கு அழைத்து வரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கான கொரியாவின் மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தில் நேற்று (18) இலங்கைக்கான கொரியாவின் வதிவிடப் பிரதிநிதியான கிம் வொன் சியோக் உடனான சந்திப்பிலேயே அமைச்சர் மேற்படி விடயங்களைச் சுட்டிக்காட்டி இருந்தார்.

இந்த சந்திப்பின் போது, இலங்கையிலிருந்து கொரியாவுக்கு தொழில் நிமித்தம் செல்வோரை பயிற்றுவிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை என்பதால், கொரிய தொழில்வாய்ப்புகளுக்காக புதிய பயிற்றுவிப்பு நிலையமொன்றை ஹோமாகமவில் நிறுவுவதற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்திருந்த நிலையில் அதற்கான தொழில்நுட்ப வசதிகளைச் செய்து தருவதாக கிம் வொன் சியோக் அமைச்சரிடம் உறுதியளித்தார்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான

# தேசிய கொள்கை வகுக்கும் பணிகள் ஆரம்பம்



நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய கொள்கை ஒன்றை வகுப்பதற்கு வாய்ப்பளிக்குமாறு, அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் முன்வைத்தக் கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள தொழில் வல்லுநர்களின் தேசிய முன்னணி, அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளனவெனவும் தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரிடத்தில் இந்தக் கோரிக்கையை பலமுறை முன்வைத்திருந்த போதும், அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ள அந்த அமைப்பின் செயலாளர் கபில ரேணுக பெரேரா, மேற்படி இருவரும் நாட்டுக்கு பொருத்தமற்றதொரு பொருளாதாரக் கொள்கைளை நடைமுறைப்படுத்தினர் எனவும் சாடினார்.

அத்தோடு, வரலாற்றில் இலங்கை மிகப் பலமான பொருளாதாரத்துக்கு உரிமைக் கோரியிருந்த போதும், இன்று அந்த நிலைமை தலைகீழாக மாறியுள்ளமை கவலைக்குரியதெனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தேசிய பொருளாதாரக் கொள்கை ஒன்று இல்லாமையே இதற்கான பிரதான காரணமெனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கான தேசிய கொள்கையை வகுப்பதற்கான அனுமதியைப் பெற்றுத்தருவதாக அமைச்சர் பந்துல குணவர்தன உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவித்தார்.



# 305 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

உலகளவில் ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 305 இலங்கை பிரஜைகள், நேற்று (18) நாடு திரும்பியுள்ளனர்.

கட்டாரில் வர்த்தகக் கப்பல் ஒன்றில் பணி புரிந்த 20 இலங்கையர்களும், ஜோர்தானின் அம்மானில் இருந்தவர்களுமே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர். நாடு திரும்பிய அனைவரும் பிசிஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு, தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சராக பதவியேற்ற

# நாமலுக்கு பிரதமர் மஹிந்த வாழ்த்து

விளையாட்டுதுறை அமைச்சின் கடமைகளை நேற்று (18) சுபநேரத்தில் பொறுப்பேற்றுக்கொண்ட அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது ஆசிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொண்டார்.

விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சில் இடம்பெற்ற மத அனுட்டானங்களின் பின்னர், அந்த அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட நாமல் ராஜபக்ஷவுக்கு, நாராஹேன்பிட்ட அபயாராம விகாரையின் விகாராதிபதி முரத்தெட்டுவே ஆனந்த தேரர் உள்ளிட்ட பலரும் ஆசிகளை வழங்கினர்.

இதன்போது, அமைச்சரின் பாரியார் நிமினி ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அவருடைய பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ, சகோதரர்களான யோசித, ரோஹித ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டிருந்ததுடன், அமைச்சர்களான டக்லஸ் தேவானந்தா, ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ ஆகியோரும் கலந்துகொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.





தேசிய இளைஞர் சேவை மன்றத்தில்

# இராஜ், இமாராவுக்கு தலைமைப் பதவி





தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவராக பாடகர் இராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

விளையாட்டுத்துறை, இளைஞர் அலுவல்கள் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால், பாடகர் இராஜ் மேற்படி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம் இலங்கையின் பிரபல பாடகியான தெஹானி இமாறாவும் அந்தச் சபையின் மற்றுமொரு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் குறித்த பதவிகளில் 3 வருடங்களுக்கு அல்லது மீள அறிவிக்கும் படி நிலைக்கலாம் என்றும் விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி மேற்படி இருவரும் குறித்த மன்றத்தின் கடமைகளைச் சரிவரச் செய்வர் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதெனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# ‘நாட்டின் மருந்துத் தேவை பூர்த்தி செய்யப்படும்’

அடுத்த ஐந்து வருடங்களுக்குள் நாட்டின் மருந்துத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு உற்பத்தியை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக பொருளாதார மறுமலர்ச்சி, வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுகாதாரத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நேற்று (18) நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



உள்ளூர் மருந்துத் தேவையில் 85 வீதத்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் ஏற்கனவே பெரும் செலவுகளைச் செய்து வருவதாக இதன்போது கூறிய பசில் ராஜபக்ஷ, தனியார் முதலீட்டார்களைக் கொண்டு, உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஏற்றுமதி திறனைக் கொண்ட

தீர்வு இல்லை என்றால்

# மீண்டும் போராடுவோம்

## வேலையற்ற பட்டதாரிகள் எச்சரிக்கை



தற்போது வெளியிடப்பட்டுள்ள அரச தொழிலில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் பெயர் விவரங்களில், சுமார் 49 ஆயிரத்துக்கும் அதிகமான வேலையற்றபட்டதாரிகளின் பெயர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அப்பட்டதாரிகள், கொழும்பில் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக, நேற்று (18) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்கம் தொழில் வாய்ப்புகளை வழங்க வேண்டுமென வலியுறுத்தி வேலையற்ற பட்டதாரிகள் தொடர்ந்து, போராடி வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது அரச நியமனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளோரின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன. இதில் 49 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகளின் பெயர் விவரங்கள் இல்லை என தெரிவித்துள்ள வேலையற்ற பட்டதாரிகள், அரச நியமனங்கள் கிடைக்கும் வரையில் தொழில் வாய்ப்புக்களை செய்து வந்ததைக் காரணங்காட்டியே இவ்வாறு தங்களது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். உறுதியளிக்கபட்டவாறு இரு வாரங்களில் தங்களுக்கு தீர்வு வேண்டுமெனவும் கோரினர்.

முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர்

# மஹிந்த விஜேசிறி காருக்குள் மரணம்



முன்னாள் பரீட்சைகள் ஆணையாளரான மஹிந்த விஜேசிறியின் சடலம், ஹொரன - கெஸ்பேவ பகுதியில் காரொன்றுக்குள் இருந்து, நேற்று (18) மீட்கப்பட்டுள்ளது.

கஹாதுடுவ பகுதியிலிருந்து நுகேகொடை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த போதே, அவர் தனது வாகனத்துக்குள் உயிரிழந்துள்ளாரென தெரியவந்துள்ளது.

அவர் 2000 - 2004 வரையான காலப்பகுதியில் பரீட்சைகள் ஆணையாளராக பணியாற்றியுள்ளார்.

# ‘கொவிட் பரவல் இளைஞர்கள் மத்தியில் உக்கிரமடைந்துள்ளது’

இளைஞர்கள் மத்தியில் கொவிட் - 19 வைரஸ் பரவல் உக்கிரமடையும் நிலைமை தோன்றியிருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

அந்த ஸ்தாபனத்தின் மேற்கு பசுபிக் வலயத்தின் பணிப்பாளர் டெகொஷி கசாயி 20 - 40 இடைப்பட்ட வயதுடையவர்கள் மத்தியில் கொவிட் - 19 வைரஸ் உக்கிரமாகப் பரவும் நிலைமை காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த வயதுக்கிடைப்பட்டவர்கள் தொற்றுக்கு ஆளாகியுள்ள போதும், அவர்கள் தாம் நோயாளிகள் என்பதை அறிந்துகொள்ளாமலேயே உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, சனத்தொகை அதிகரித்து காணப்படுகின்ற பகுதிகளிலும், வறுமையான பகுதிகளிலும் வசிப்பவர்களிடையே மேற்படி வைரஸ் தொற்று வேகமாக பரவி வருகின்றதெனவும் தெரிவித்தார்.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளின் கீழ் கீழ்க்கானும் கம்பனியின் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

கம்பனியின் பெயர்: தருபதி டிரேடிங் (பிரைவட்) லிமிட்டட்

பதிவு செய்த அலுவலகம்:

இல. 7, டெம்பல் வீதி, கடுவாகொட, மாத்தறை.

பதிவு செய்த இல: P V - 00213701

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 18 ஜூலை 2019

கம்பனி செயலாளர்



## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளின் கீழ் கீழ்க்கானும் கம்பனியின் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

சேபஸ்கேன் செக்யூரிட்டி சொலுஷன்ஸ் (பீவீட) எல்டீடி
P V - 00220060
இல. 65, விஜய குமாரதுங்க மாவத்தை, பொல்லஹேன்கொட, கொழும்பு - 05. சிறீ லங்கா.

விஷ் ஹொஸ்பிட்டல் என்ட் ரிசேர்ச் சென்டர் (பிரைவட்) லிட்டட்
P V - 00225577
இல. 393/6, கசகாஹாவத்தை வீதி, உடாமுல்ல, நுகேகொடை.

மதூஷி பேக்கேஜிங் (பிரைவட்) லிட்டட்
P V - 00225544
இல. 89, பராக்கிரம மாவத்தை, பேலியகொடை.

குளோபல் செர்ஃப்லைன் (பிரைவட்) லிட்டட்
P V - 00225191
இல. 176/12, 3 வது ஒழுங்கை, பிரதான வீதி, வெலிகம.

லங்கா ஹிமாலயன் யோகா நிகேத்தன் (பீவீட) எல்டீடி
P V - 00223752
“சிறீயோகி” இல. 171, எசீடும, குளியாபிடிய.

ஏ பி எப் புரூட் கார்டன் (பிரைவட்) லிட்டட்
P V - 00223287
இல. 150, சோன் 1, மிலேனியம் சிட்டி, ஜா-ஹெல.

கம்பனி செயலாளர்கள்

பொலிஸ் நிலையங்களுக்குள் நெருக்கடி

# அறிக்கையைக் கோருகிறது ஆணைக்குழு

நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் பணியாற்றுகின்ற ஊழியர்கள் தொடர்பான அறிக்கையொன்றைக் கையளிக்குமாறு, பதில் பொலிஸ்மா அதிபரிடத்தில், தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிக்கையொன்றைக் கோரியுள்ளது.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பணியாற்றுகின்ற, பணியாற்றுவதற்கு அவசியமான ஊழியர்களின் தொகை தொடர்பாகவே பொலிஸ் ஆணைக்குழு தகவல்களைக் கோரியுள்ளதாகக் கூறப்படுகிறது.

நாடு முழுவதிலும் 489 பொலிஸ் நிலையங்கள் காணப்படுவதுடன், அவற்றில் சில பொலிஸ் நிலையங்களுக்குள் தேவைக்கு அதிகமாக ஊழியர்கள் இருக்கின்ற போது, இன்னும் சில பொலிஸ் நிலையங்களில் போதியளவு ஊழியர்கள் இல்லையெனவும் கூறப்படுகிறது.

மேற்படி பொலிஸ் நிலையங்களில் அதிகமான ஊழியர்கள் இருக்கின்ற போதும், அவர்களுக்கு உரிய பணிகள் கையளிக்கப்பட்டுள்ளனவெனவும், அவர்களில் சிலர் தமது சொந்த இடங்களில் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதனால் சில பொலிஸ் நிலையங்களில் வழமையான பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளதாகவும், அதனை கருத்தில்கொண்டே தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிக்கையொன்றைக் கோரியுள்ளதெனவும் கூறப்படுகிறது.

இதன்படி இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணிகளை, பதில் பொலிஸ்மா அதிபரால், சப்ரகமுவ மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் எல்.எஸ்.பதிநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.



## நன்றி நவிலல்...

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில், முஸ்லிம் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு, புத்தளம், எழுவன்குளத்தில் நடைபெற்றது. இதன்போது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியூதீன், நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

(படம் – எம்.யூ.எம். சனூன்)

# கொட்டடியில் அகழ்வுப் பணி

■ எம். றொசாந்த், எண். ராஜ், எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம் - கொட்டடிப் பகுதியில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மனித எச்சங்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, நீதிமன்றத்தின் அனுமதியுடன், அப்பகுதியில், நேற்று (18) அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி, யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எஸ். பீற்றர் போல் முன்னிலையில், அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, பெண் ஒருவருடையது என்று நம்பப்படும் மனித எச்சங்கள், பற்பசை பக்கட், பல் விளக்கும் பிறஸ், சீப்பு, பவுடர் பேணி, 3 மேற்சட்டைகள், பாவடை ஒன்று உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன.

அவற்றை வைத்து ஒப்பிடும் போது, பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு இந்த இடத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

எனினும், நிபுணத்துவ ஆய்வு ஊடாகவே, மனித எச்சங்கள் எந்தக் காலப்பகுதிக்குரியவை என உறுதிப்படுத்தப்பட்டு, விசாரணைகளை முன்னெடுக்க முடியுமென, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிபுணத்துவ சட்ட மருத்துவ அதிகாரி உ. மயூரதன், கடமை விடுப்பில் உள்ளதால், அவரது முன்னிலையில் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க உத்தரவிட்ட பதில் நீதவான், பணிகளை இன்று (19) வரை ஒத்திவைத்தார்.

இதேவேளை, இது தொடர்பில் செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

இரண்டிலும் கையை வைப்பது

# ‘ஆபத்து’

## அனுமதியோம் என்கிறார் ஜனா

■ சகா



“13ஆவது, 19ஆவது அரசமைப்புத் திருத்தங்களை ஒழிப்பதற்கு இந்த அரசாங்கம் முற்படுமாயின், அது சிறுபான்மை மக்களின் மீது கை வைப்பதற்குச் சமமாகும். அதற்கு ஒருபோதும் அனுமதியோம்” என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

“நாட்டின் அரசமைப்புத் திருத்தங்களில் சிறுபான்மையினரின் நலனுக்காக கொண்டுவரப்பட்டதே 13ஆவது திருத்தம். அத்துடன், மக்களின் உரிமைச் சுதந்திரங்கள் பேணப்படுவதற்கு வசதியாக 19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது” எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று (18) ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில், “உண்மையில் 13ஆம், 19ஆம் திருத்தங்களை மீண்டும் திருத்துவதோ, நீக்குவதோ அவசியமற்றதொன்று.

“நாட்டில் எப்போது பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதோ அன்று தொடக்கம் பிரச்சினை ஆரம்பமானது. நாட்டில் இன்று வரைக்குமான இனப்பிரச்சினைக்குக் காரணமே அதுதான். அது நடைமுறைக்கு வந்திருந்தால் பிரச்சினையே இல்லை. அதேபோன்றதொரு நிலை உருவாக்க இந்நீக்கம் வழிகோலும். எனவே அதற்கு இடமளிக்க முடியாது.

“தமிழ் மக்களின் தொடர் போராட்டத்தை மய்யமாக வைத்து, இந்திய அரசாங்கத்தின் தலையீட்டில் மாகாண சபை முறைமை வந்தது. 13ஆவது திருத்தத்துக்கு மேலும் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கி வலுப்படுத்துவதை விட்டுவிட்டு, அதை நீக்குவதென்பது நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும்.

“வடக்குக்கு மட்டும் காணி, பொலிஸ் அதிகாரத்தை வழங்கமுடியாதென்று அமைச்சர் கூறுவது சர்வாதிகாரம். அதற்கெதிராக நாம் வலுவாகப் பேராடுவோம்” என்றார்.

# உணவுப் பொதிகளுடன் பணமும் கொள்ளை

## சந்தேக நபர்கள் சிக்கினர்

காலி நகருக்குள் உணவுப் பொதிகள் தொடர்பாக முற்பதிவுகளை மேற்கொள்ளும் நபரொருவரை அச்சுறுத்தி, அவர் வசமிருந்த உணவுப் பொதிகளையும் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றதாக சந்தேகிக்கபடும் இருவரை, அக்மீமன பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்தோடு, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரைக் கைது செய்வதற்கான ஆரம்பக்கட்ட விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர்களால் படதுவ பிரதேசத்துக்கு உணவுப் பொதிகளைக் கொண்டு வந்து தருமாறு முற்பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும்

**“இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரைக் கைது செய்வதற்கான ஆரம்பக்கட்ட விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்**

அதன்படி உணவுப் பொதிகளுடன் குறிப்பிட்ட இடத்துக்கு வந்த உணவகத்தின் ஊழியரை அச்சுறுத்தி, அவரிடமிருந்த 27 ஆயிரத்துக்கும் அதிகமான பணத்தையும் 13 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகளையும் சந்தேகநபர்கள் பறித்துச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள இருவரையும் இன்று (19) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவின்

# அதிகாரிகளின் விளக்கமறியல் நீடிப்பு

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் 13 பேருக்கு விதிக்கப்பட்டிருந்த விளக்கமறியல், இம்மாதம் 31ஆம் திகதி வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தங்களால் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களை மீண்டும் அவர்களுக்கே விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு விசாரணை, கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று (18) எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

எவ்வாறாயினும், கொரோனா வைரஸ் பரவலைக் கருத்திற்கொண்டு, மேற்படி வழக்கு விசாரணைகளில் சந்தேகநபர்கள் ஆஜர்படுத்தப்பட்டு இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிள்ளையானுக்கு பிறந்த நாள்

# நடுவீதியில் கேக் வெட்டிக் கொண்டாட்டம்

■ எம்.எம். அஹமட் அனாம்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) 45ஆவது பிறந்த நாள், வாழைச்சேனை, பேத்தாழையில் நேற்று (18) கொண்டாடப்பட்டது.

கட்சியின் பிரதி தலைவர் நா.திரவியம் தலைமையில், பேத்தாழை பிரதான வீதியில் கேக் வெட்டி, பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

இதன்போது, சிவநேசதுரை சந்திரகாந்தனின் தயாரான திருமதி கே.சிவநேசதுரை, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு

# ‘இராணுவத்தின் உதவியை நாடவுள்ளோம்’

■ மு.தமிழ்ச்செல்வன், சுப்பிரமணியம் பாஸ்கரன், எஸ்.என். நிபோஜன்

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு, இராணுவத்தினரின் உதவியை நாடவுள்ளதாக, கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில், நேற்று (18) நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றமை குறித்து, ஊடகவியலாளர் உட்படப் பலரும் தங்களின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனரென்றார்.

சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு, பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதிலும், அதை முழுமையாகக் கட்டுப்படுத்த



முடியவில்லையெனத் தெரிவித்த றூபவதி கேதீஸ்வரன், கண்டாவளை பிரதேச செயலாளரின் நேரடி நடவடிக்கைகளால் அந்தப் பிரதேசத்தில், இயலுமானவரை சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக, இரணைமடுக்குளத்தின் கீழான சட்டவிரோத மணல் அகழ்வால் குளத்துக்கு பாதிப்பு ஏற்படலாமெனத் தெரிவித்த அவர், எனவே இதனைக் முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தினரின் உதவியை நாடவுள்ளதாகவும் கூறினார்.

இது தொடர்பில், இன்று (19), கிளிநொச்சி படைகளின் கட்டளைத் தளபதியைச் சந்தித்து, கலந்துரையாடவுள்ளதாகவும், மாவட்டச் செயலாளர் மேலும் கூறினார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள்

# ‘ஔடத ஏற்றுமதித் துறையில் நாடு முன்னணியில் திகழும்’

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் நாட்டின் ஔடத தேவையைப் பூர்த்தி செய்வதுடன், ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு, உற்பத்தியை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக, பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவர் பசில் ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுகாதாரத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச அதிகாரிகளுடன், அலரி மாளிகையில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற சந்திப்பின்போதே, பசில் ராஜபக்‌ஷ இவ்வாறு கூறினார்.

உள்ளூர் ஔடத தேவையில் 85 சதவீதத்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் ஏற்கெனவே பெரும் செலவுகளைச் செய்து வருவதாகச் சுட்டிக்காட்டிய பசில் ராஜபக்‌ஷ, உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஏற்றுமதி திறனைக் கொண்ட தொழிற்சாலைகளைத் தனியார் முதலீட்டாளர்களைக் கொண்டு நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

ஜனாதிபதியின் ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கை திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு ஒரு மகத்தான ஆணையை வழங்கியுள்ள மக்கள், சுகாதாரத் துறையில் ஒரு தெளிவான மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள்.இந்த மாற்றத்தை ஏற்படுத்த சுகாதார துறையுடன் தொடர்புடைய நிறுவனங்கள், ஏற்றுமதித் துறை தொடர்பான நிறுவனங்களின் உதவியை நாடுவதாகவும் ஆடை ஏற்றுமதித் துறையில் முன்னணியில் திகழ்ந்த இலங்கை, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஔடத ஏற்றுமதித் துறையில் முன்னணியில் திகழ்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன எனவும் பசில் ராஜபக்‌ஷ மேலும் தெரிவித்தார்.

வாகன விபத்து

# இரு சகோதரர்களில் ஒருவர் பலி

மட்டக்களப்பு - திருகோணமலை வீதி, மாங்கேணி பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில், மாங்கேணி, பிரப்பையடிமடுவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சபாபதி சிவனேஸ்வரன் (வயது 28) என்பவர் உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த அவரது சகோதரரான சபாபதி ரவியேந்திரன் (வயது 22) பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என, வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

மாங்கேணி, பிரப்பையடிமடு பிரதேசத்தில் இருந்து மாங்கேணி கடற்கரையில் மீன் பிடிப்பதற்கு சைக்கிளில் சகோதரர்கள் இருவர் நேற்று முன்தினம் (17) மாலை பயணித்த போது, மாங்கேணி, புல்லாவி



பிரதேசத்தில் வைத்து திருகோணமலையில் இருந்து வந்த கார் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

மரணமடைந்தவரின் சடலம், வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஹெரோய்னுக்கு அடிமை; 13 பேர் கைது

■ முஹம்மது முஸப்பிர்

மாதம்பை, தம்பகல்லவத்தை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபட்ட இருவரைக் கைது செய்த மாதம்பை பொலிஸார், ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையான 11 பேரையும் கைது செய்தாகவும் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து ஐந்து கிராமும் 380 மில்லி கிராமும் எடையுடைய ஹெரோய்னை கைப்பற்றியுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 20 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் இவர்களில் இருவர் ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபடுவர்கள் என்றும், அவர்களில் ஒருவரிடமிருந்து 2,160 மில்லி கிராம் ஹெரோய்னையும் மற்றையவரிடமிருந்து 2,320 மில்லி கிராம் ஹெரோய்னையும் கைப்பற்றியுள்ளதாகவும், தம்பகல்ல அண்மித்த



பிரதேசங்களில் விற்பனை செய்து வந்துள்ளமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஐ. அமெரிக்கா

உலகளாவிய ரீதியில் கொவிட்–19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை

# 22 மில்லியனை தாண்டியது



> ஐக்கிய அமெரிக்காவில் 5,421,682 பேர் கொவிட்–19 தொற்றுக்குள்ளாகியிருந்ததுடன், 170,045 பேர் கொவிட்–19–ஆல் உயிரிழந்திருந்தனர்

உலகளாவிய ரீதியில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 22 மில்லியனைத் தாண்டியதுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 775,000ஐத் தாண்டியது.

இந்நிலையில், 14 மில்லியனுக்கும் மேற்பட்டோர் கொவிட்-19-இலிருந்து குணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய அமெரிக்காவில் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் மாலை 5.30 மணி வரையில் 5,421,682 பேர் கொவிட்-19 தொற்றுக்குள்ளாகியிருந்ததுடன், 170,045 பேர் கொவிட்-19-ஆல் உயிரிழந்திருந்தனர்.

பிரேஸிலானது கடந்த 24 மணித்தியாலங்களில் புதிதாக 19,373 கொவிட்-19 தொற்றுக்களையும், 684 கொவிட்-19-ஆலான உயிரிழப்புகளையும் பதிவுசெய்ததாக அந்நாட்டு சுகாதாரமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்த நிலையில், அங்கு கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 3,359,570-ஆக அதிகரித்ததுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 108,536ஆக அதிகரித்திருந்தது.

இந்தியாவில் நேற்றுக் காலை எட்டு மணி வரையில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 55,079-ஆல் உயர்ந்து 2,702,742ஆகக் காணப்பட்டதுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 876-ஆல் உயர்ந்து 51,797-ஆகக் காணப்படுகின்றது.




இந்தியா

தூத்துக்குடி

# ‘ஸ்டெர்லைட் ஆலைக்கான தடை தொடரும்’

இந்தியாவின் தமிழ்நாட்டின் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கான தடை தொடரும் என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஸ்டெர்லைட் ஆலையிலிருந்து வெளியாகும் நச்சு புகையால் பொதுமக்களுக்கு நோய்கள் பரவுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதை வலியுறுத்தி கடந்த 2018ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி பொதுமக்கள் நடத்திய மிகப்பெரிய போராட்டம், வன்முறையாக மாறியது.

இதில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் பபலியாகினர். இதையடுத்து அதே ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி ஸ்டெர்லைட் ஆலைக்கு தமிழ்நாடு அரசாங்கம் “சீல்” வைத்தது. இதை எதிர்த்தும் ஆலையைத் திறக்க அனுமதி கோரியும் ஸ்டெர்லைட் ஆலையை நடத்தி வரும் வேதாந்தா நிறுவனம், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

ஆனால், தமிழ்நாடு அரசாங்கம் எடுத்த முடிவு சரிதான் என்றும், தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் நச்சுப்புகையால் பொதுமக்களுக்கு நோய்கள் வருகிறது. அதனால் அந்த ஆலையைத் திறக்கக்கூடாது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தூத்துக்குடியைச் சேர்ந்த ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பாத்திமா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ, தமிழ்நாடு வணிகர் சங்கப்பேரவை மாநில இளைஞர் அணி அமைப்பாளர் தெர்மல் சொ. ராஜா, மக்கள் அதிகாரம் அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் வக்கீல் ராஜூ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்டச் செயலாளர் அர்ஜூனன், தூத்துக்குடி மாவட்ட ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு சார்பில் வழக்கறிஞர் அரிராகவன் உள்ளிட்டோர் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்குகளை விசாரிக்க நீதிபதிகள் சிவஞானம், பவானி சுப்பராயன் அடங்கிய சிறப்பு அமர்வை அமைத்தது சென்னை உயர் நீதிமன்றம். கடந்தாண்டு ஜூன் 27ஆம் திகதி முதல் சிறப்பு அமர்வில் வழக்கு விசாரணை தொடங்கியது. 39 நாள்கள் விசாரணைக்கு பின், இவ்வாண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதி இந்த வழக்கின் தீர்ப்பு திகதி குறிப்பிடாமல் தள்ளிவைக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்குகளின் தீர்ப்பை நீதிபதிகள் நேற்று காணொளிக் காட்சி மூலம் பிறப்பித்தனர். அப்போது, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு விதிக்கப்பட்ட தடை தொடரும் என்று கூறி வேதாந்தா நிறுவனம் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்தனர்.

ஸ்டெர்லைட் ஆலை வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்படுவதையொட்டி, தூத்துக்குடியின் முக்கிய இடங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்க சுமார் 1,500 பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.



ஆப்கானிஸ்தான்

காபூலில் றொக்கெட் தாக்குதலில்

# 10 பேர் படுகாயம்; தூதரகங்கள் முடக்கம்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலை ஒரு டசினுக்கும் அதிகமான றொக்கெட்டுகள் நேற்றுத் தாக்கிய நிலையில், சிறுவர்கள் உள்ளடங்கலாக குறைந்தது 10 பேர் காயமடைந்திருந்ததுடன், இதையடுத்து சில வெளிநாட்டுத் தூதரகங்கள் முடக்கமொன்றை உத்தரவிட்டதாக காபூலிலுள்ள அதிகாரிகள், தகவல்மூலங்கள் தெரிவித்துள்ளன.

தாக்குதலாளிகளின் அடையாளம் தெரியாதபோதும், இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுளதாக உள்நாட்டமைச்சின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் அரசாங்கம், தலிபானுக்கிடையே ஐக்கிய அமெரிக்கா சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஊக்குவிக்கின்ற நிலையிலும், ஏறத்தாழ 19 ஆண்டுகள் போரை முடிவுக்கு கொண்டு வர ஐக்கிய அமெரிக்கப் படைகள் தயாராகுகையிலேயே குறித்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

புகை வெளிவந்ததுடன், எச்சரிக்கை மணிகள் ஒலிக்கப்பட்டதுடன், சிதறல்கள் பறந்ததாகவும், பல வெளிநாட்டுத் தூதரகங்கள், வட அத்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் தலைமையகங்களின் தாயகமான பச்சை வலயப் பகுதிக்கு அருகே குறைந்தது நான்கு றொக்கெட்டுகள் தரையிறங்கியுள்ளன.

எச்சரிக்கை மணியானது வெடிப்புக்கு இரண்டு தொடக்கம் மூன்று செக்கன்களுக்கு முதல் ஒலித்ததாகவும், இரண்டாவது பாரிய வெடிப்பொன்றும் ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் தனது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகையிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு வாகனங்களிலிருந்து சில றொக்கெட்டுகள் ஏவப்பட்டதாக உள்நாட்டமைச்சின் பேச்சாளர் தாரிக் அரியன் தெரிவித்துள்ளதுடன், காபூலின் பல்வேறு பகுதிகளில் 14 றொக்கெட்டுகள் தரையிறங்கியதாகவும், காயமடைந்த 10 பேரில் நான்கு பேர் சிறுவர் எனக் கூறியுள்ளார்.

இஸ்ரேல்

# ‘பொலிஸாரைக் குத்தியவர் சுட்டுக் கொலை’

இஸ்ரேலின் ஜெருசலேம பழைய நகரத்தில் இஸ்ரேலியப் பொலிஸாரொருவரைக் காயப்படுத்திய கத்தியை வைத்திருந்த நபரொருவர், அதிகாரியொருவரால் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸ் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்ட நபரின் அடையாளமானது உடனடியாக சரியாகத் தெரியவில்லை என மேற்குறித்த பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



சமூகவலைத்தளத்தில் காணப்படும் காணொளியில், தனது 20களில் அல்லது 30களில் உள்ள சத்திரசிகிச்சை முகக்கவசமொன்றை அணிந்த நபரொருவர், இஸ்ரேலியப் பொலிஸாரொருவர் அவரை நோக்கி பிஸ்டலைக் குறிபார்க்கையில் உணர்வற்றவராகக் கிடக்கிறார்.

எதிர்கால தேசமொன்றுக்காக பலஸ்தீனர்கள் வேண்டுகின்ற பழைய நகரமும், ஏனைய கிழக்கு எருசலேலப் பகுதிகளும் ஆங்காங்கே இஸ்ரேலியர்கள் மீது வீதித் தாக்குதல்களை, ஐக்கிய அமெரிக்கா அனுசரணையுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததிலிருந்து சந்தித்து வருகிறது.



## அமெஸொன் தீயால் காடு எரிவு

அமெஸொனில் பரவும் தீயானது பண்ணை நிலங்களை அழிக்கின்ற நிலையில் வட மேற்கு பிரேஸிலுள்ளவர்களும் தீயணைப்புப் படைவீரர்களும் போராடி வருகின்றனர்.

இந்தியா

கொவிட்–19–இலிருந்து குணமடைந்த

# அமித் ஷா மீண்டும் வைத்தியசாலையில்

இந்தியாவின் உள்நாட்டமைச்சர் அமித் ஷா, உடற்சோர்வு மற்றும் உடல்வலி முறைப்பாடுகளையடுத்து நேற்று மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



> கொவிட்–19–இலிருந்து தான் குணமடைந்து விட்டதாக அவர் தெரிவித்து நான்கு நாள்களில் அமித் ஷா வைத்தியசாலையில் மீண்டும் அனுமதிக்கப்பட்டுள்ளார்

கொவிட்-19-இலிருந்து தான் குணமடைந்து விட்டதாக அவர் தெரிவித்து நான்கு நாள்களில் அமித் ஷா வைத்தியசாலையில் மீண்டும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நெருங்கிய உதவியாளரும், மெய்நிகர் பிரதிப் பிரதமரான அமித் ஷா, இந்தியாவின் தலைநகர் புதுடெல்லியிலுள்ள மருத்துவ விஞ்ஞானங்களுக்கான அனைத்திந்திய நிறுவகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையொன்றில் குறித்த வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

அமித் ஷா வசதியாக இருப்பதாகவும், வைத்தியசாலையிலிருந்து அவரது பணியைத் தொடருவதாகவும் குறிப்பிட்ட குறித்த வைத்தியசாலை, அவருக்கு கொவிட்-19 இல்லை என உறுதிசெய்யப்பட்டுள்ளதாக மேலும் கூறியுள்ளது.

நெதர்லாந்து

முன்னாள் பிரதமர் ஹரிரியின் கொலையில்

# ‘ஹிஸ்புல்லா, சிரியாவுள்ளதாக ஆதாரமில்லை’

லெபனானின் முன்னாள் பிரதமர் றஃபிக் அல்-ஹரிரி, கடந்த 2005ஆம் ஆண்டு கொல்லப்பட்டதில் ஹிஸ்புல்லா தலைமைத்துவமோ அல்லது சிரிய அரசாங்கமோ பங்கெடுத்ததாக ஆதாரமெதுவில்லை என ஐக்கிய நாடுகளால் ஆதரிக்கப்படும் தீர்ப்பாயமொன்று நேற்றுத் தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் றஃபிக் அல்-ஹரிரி, 21 பேரைக் கொன்ற பாரிய குண்டுத் தாக்குதலை மேற்கொள்ள சதித்திட்டத்தை மேற்கொண்டதாக ஈரானால் ஆதரவளிக்கப்படும் ஷியா குழுவான ஹிஸ்புல்லாவின் நான்கு உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

சுன்னி முஸ்லிம் செல்வந்தரான லெபனானின் முன்னாள் பிரதமர் றஃபிக் அல்-ஹரிரி, ஐக்கிய அமெரிக்காவுடனும், மேற்குலகத்துடனும், சுன்னி அரேபிய வளைகுடா நட்புறவு நாடுகளுடனும் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்ததுடன், லெபனானில் ஈரானிய, சிரியத் தாக்கத்துக்கு ஆபத்தொன்றாகக் கருதப்பட்டிருந்தார்.

1975ஆம் ஆண்டு தொடக்கம் 1990ஆம் ஆண்டு வரையான சிவில் யுத்தத்தைத் தொடர்ந்து லெபனானின் தலைநகர் பெய்ரூட்டை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முன்னாள் பிரதமர் றஃபிக் அல் ஹரிரி முன்னெடுத்திருந்தார்.



இந்நிலையில், முன்னாள் பிரதமர் றஃபில் அல் ஹரிரி மற்றும் அவரது அரசியல் நட்புறவாளர்களை அகற்றும் நோக்கங்கங்களை சிரியா, ஹிஸ்புல்லா கொண்டிருந்திருக்கலாம் எனவும் ஆனால், அவரது கொலையில் ஹிஸ்புல்லா தலைமைத்துவம் பங்கெடுத்ததாக ஆதாரமெதுவும் இல்லை எனவும், சிரியாவின் பங்கெடுப்பின் நேரடியான ஆதாரமெதுவும் இல்லை என தீர்ப்பாயம் நோக்குவதாக நீதிபதி டேவிட் றே தெரிவித்துள்ளார்.

ஐ. அமெரிக்கா

இஸ் ரேலிய சேர்ப்புக்களை

# ‘சில காலத்துக்கு ஐக்கிய அமெரிக்கா அங்கிகரிக்காது’

பலஸ்தீனத்தின் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய சேர்ப்புகளுக்கு சில காலத்துக்கு ஐக்கிய அமெரிக்கா அனுமதி வழங்காதென்றும், இஸ்ரேல்-ஐக்கிய அரபு அமீரக வழமையாக்கல் ஒப்பந்தம் மற்றும் பரவலாக பிராந்திய சமாதான நடவடிக்கைகளிலேயே கவனத்தை முதன்மையாகச் செலுத்தும் என ஐக்கிய அமெரிக்காவின் வெள்ளை மாளிகை சிரேஷ்ட ஆலோசகர் ஜரெட் குஷ்னர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுடனான உறவுகளை வழமையாக்கும் தமது நகர்வானது பலஸ்தீனர்களை கோபப்படுத்திய சேர்க்கும் திட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாக ஐக்கிய அரபு அமீரகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தனது ஆளும் கூட்டணிக்குள்ளேயே வேறுபாடுகளால் சிக்கலைச் சந்தித்துள்ள இணைக்கும் திட்டமானது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

எனினும், இஸ்ரேலின் பிரதான நட்புறவுநாடான ஐக்கிய அமெரிக்காவிலிருந்து முதலில் அனுமதியைத் தாங்கள் வேண்டுவதாக இஸ்ரேலிய அதிகாரிகள் சமிக்ஞை செய்துள்ளனர்.



தமது அங்கிகாரமில்லாமல் முன் செல்ல மாட்டோம் என இஸ்ரேல் எம்முடன் இணங்கியுள்ளது என அலைபேசி மூலமான செய்தியாளர் மாநாடொன்றில் செய்தியாளர்களிடம் தெரிவித்த ஜரெட் குஷ்னர், சில காலத்துக்கு தங்களது அனுமதியை வழங்கும் திட்டமெதுவையும் தாங்கள் கொண்டிருக்கவில்லை எனக் கூறியுள்ளார்.

# குதிரை லாயங்களைக் குறிவைக்கும் தீ நாக்குகள்

மின்சாரம் தடைப்பட்டு, பகல்வேளையில் நாடே இருண்டிருந்தமையால், மக்களின் அன்றாட வாழ்க்கையோட்டத்தில் சிறுசிறு தடங்கல்கள் ஏற்பட்டிருந்தன. மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவருவதற்கு இரண்டொரு நாள்கள் எடுக்குமென, இலங்கை மின்சார சபை அறிவித்திருந்தாலும் மலையகத்தின் லயன் காம்பிராக்களைத் தீ நாக்குகள் தின்றுவிட்டன.

கூலிக்கு, அடிமைகளாக அழைத்துவரப்பட்ட மக்களுக்கு, பிரித்தானியர் கட்டிக்கொடுத்த, குதிரை லாயன்கள் போன்ற லயன் குடியிருப்புகள், பல இடங்களில் அப்படியே எவ்வித மாற்றங்களுமின்றிக் காட்சியளிக்கின்றன. கூரைகளின் மேலே, ஏகப்பட்ட இறப்பர் தார்ப்பாய்கள் விரிக்கப்பட்டு, கற்களால் பாரம் வைக்கப்பட்டுள்ளமை அவல வாழ்க்கையின் சான்றுகளில் மிகமுக்கியமான ஒன்றாகும்.

எட்டு சதுர அடி அறைகளில், இரண்டு, மூன்று பரம்பரைகள் குடும்பம் நடத்துவது மட்டுமன்றி, ஜீவனோபாயத்துக்காக, ஆடு, கோழிகளையும் வளர்க்கும் நிலைமையே பல இடங்களில் இன்னுமுள்ளன. ஆனால், பெரும்பாலான லயன் வீடுகளில் மின் விளக்குகள் ஒளிர்வதை அவதானிக்க முடிகின்றது.

தனிவீட்டுத்திட்டம், மாடிவீட்டுத்திட்டம், 10 பேர்ச் காணியுடன் கூடிய வீடுகள் என, தேர்தல் பரப்புரைகளின் போது அள்ளிவீசப்பட்ட வீராப்புப் பேச்சுகளுடன் கூடிய உறுதிமொழிகள், லயன் கூரைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் கற்களில் பட்டுத்தெறித்து சிதறியமையால், சில உறுதிமொழிகள் உண்மையாக்கப்பட்டுள்ளன; அவை வரவேற்கத்தக்கன.

ஆனாலும், மலையக லயன்களில் அடிக்கடி ஏற்படும் தீ பரவல்களால், சிறுக, சிறுகச் சேமித்து, கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதிமிக்க பொருள்களும் மிக முக்கியமான ஆவணங்களும் கல்விச்சான்றிதழ்கள் உள்ளிட்ட இன்னும் பல்வேறான ஆவணங்களும் தீக்கு இரையாகிச் சாம்பலாகி விடுகின்றன.

ஏற்பட்ட தீ விபத்துகளுக்கெல்லாம் மின்னொழுக்கே காரணமென, பொதுவான விளக்கமொன்று கூறப்பட்டாலும் மின்னொழுக்கு ஏற்படாதவகையில், எவ்விதமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்வைக்கப்படவில்லை. வீடுகளை இழந்து நிர்க்கதியாக நிற்கும் மக்களைப் பார்வையிட வருவோர், பசப்பு வார்த்தைகளை அள்ளிவீசிவிட்டுச் சென்றுவிடுவர்.

கடந்தகாலங்களில் ஏற்பட்ட தீ விபத்துகளால் நிர்க்கதியானவர்கள், தஞ்சமடைந்த தற்காலிக முகாம்களிலேயே இன்னும் வாழ்ந்து வருவது வேதனையானது. இவ்வாறிருக்கையில் லயன் அறைகளைத் தீ அடிக்கடி சூறையாடிவிடுகிறது.

மலையக மக்களில் ஒருசிறு பகுதியினர், கல்விகற்றுப் பல துறைகளில் தங்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிக்கொண்டுள்ளனர் என்பது உண்மை. ஆனால், 'லயன் காம்பரா' எனக் கூறப்படுகின்ற அவலம் நிறைந்த குடியிருப்புகளில், இன்னுமே பெருமளவு மக்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். அவை, முற்றுமுழுதாக மாற்றியமைக்கப்பட்டு, அம்மக்களின் வாழ்விலும் சுபீட்சம் ஏற்படவேண்டும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk




## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

கலகலப்பாகப் பேசுகின்றவர்களை, எல்லோருக்கும் பிடித்துவிடுகின்றது. எல்லோரையும் சந்தோசப்படுத்துவதால் தோன்றும் மகிழ்ச்சியை விட, வேறென்ன மகிழ்ச்சி உலகத்தில் இருக்கப் போகிறது?

துன்பத்துடன் இருப்பவர்களை, உவகைக்குள்ளாக்குவது சாதாரண விடயமல்ல; அதற்கெனத் தனித்திறமை வேண்டும். இது தானகவே சிலருக்கு வந்துவிடுகின்றது.

புன்னகைத்த வதனமும் குழந்தை மனமும் இணைந்துவிட்டால், வசீகரமானவர்களாகத் திகழ்வார்கள்.

எதையும் நெஞ்சத்துக்குள் புதைத்து வைத்து மறுகாமல், வெளிப்படையாகப் பேசுபவர்கள் வஞ்சக நெஞ்சம் அற்றவர்கள்.

இயற்கையாக நல்ல குணாம்சங்கள் கொண்டவர்கள், நடிக்க வேண்டிய அவசியமில்லை. அன்பைப் பகிர்வது இனிமையான அனுபவமாகும்.

எப்போதும் சோகக் கதைகளைப் பேசுவது, ஒருவர் மனதை வேதனைப்படுத்துவது போலாகும். ஒருவரின் மகிழ்ச்சி, பலருக்கும் பரவுகின்றது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாடசாலை மலசல கூடத்தை மீட்டு தரவும்

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ், 15 இலட்சம் ரூபாய் செலவில், ஆண்களுக்கும் பெண்களுக்குமான மலசல கூடங்கள், 2016இல் அமைத்துக்கொடுக்கப்பட்டிருந்தன. இருந்தபோதிலும், இவற்றை இன்று வரை, மாணவமாணவிகள் பயன்படுத்த முடியாதநிலை காணப்படுவதாக, பாடசாலை சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்துக்குச் சொந்தமான காணியைப் பொது மக்கள், அடாத்தாகப் பிடித்துக் குடியிருந்த நிலையில், அவர்களுக்கு நகரத்தில் பெறுமதிமிக்க இடத்தில் மாற்றுக் காணி வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். ஆனால், பாடசாலைக் காணியில் வெதுப்பகம் ஒன்றை அமைத்து நடத்தி வருகின்ற ஒருவர் மாத்திரம், மாற்றுக் காணிக்குச் செல்ல, தொடர்ந்தும் மறுத்து வருகின்றார். இதனால், மலசல கூடத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த மலசல கூடத்தைப் பயன்படுத்துவதற்கு, மாணவமாணவிகள் வெதுப்பகத்தைக் கடந்தே செல்ல வேண்டும். ஆனால், வேலி அடைத்துத் தடுக்கப்பட்டு உள்ளமையால், மாணவர்களால் மலசல கூடத்துக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.தேசிய அரசியல் கட்சி ஒன்றின், பிரதேச சபை உறுப்பினரே, பாடசாலைக் காணியில் தொழில் செய்து வருகின்றார்.

அதிகளவு மாணவர்களைக் கொண்டுள்ள, ஆரம்பப் பாடசாலை என்ற வகையில், தற்போது பாடசாலையில் உள்ள மலசல கூடங்களையே சுகாதார நெருக்கடிக்கு மத்தியில், மாணவர்கள் பயன்படுத்துகின்றனர். எனவே, குறித்த மலசல கூடத்தை மாணவர்களின் பயன்பாட்டுக்கு விடுவித்து தருமாறு, தகுதிவாய்ந்த அதிகாரிகளிடம் பாடசாலை சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு, பயன்படுத்தப்படாதுள்ள குறித்த மலசல கூடத்தை, சமூக விரோத செயற்பாடுகளுக்கும் சமூகவிரோதிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை கவலையளிக்கும் விடயமாகும்.

–என். ராஜ்



எம்.எஸ்.எம். ஐயூப்

இன ரீதியான அரசியலைக் கைவிட்டு, தேசிய அரசியலின் பக்கம்

# தமிழ் மக்கள் திரும்புகிறார்களா?

கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் பெற்ற ஆசன எண்ணிக்கையைப் பற்றியும் அது எதைக் காட்டுகிறது, அதன் விளைவுகள் எவ்வாறு அமையும் என்பவற்றைப் பற்றி, ஊடகங்களில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதில் பிரதானமாக, தமிழ்க் கட்சிகளின் பிரதான கூட்டணியாகக் கருதப்பட்டு வந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைமையைப் பற்றியே, பிரதானமாக ஆராயப்பட்டு இருந்தன.

2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில், 16 ஆசனங்களைக் கூட்டமைப்பு பெற்றிருந்தது. இம்முறை அந்த எண்ணிக்கை, 10 ஆகக் குறைந்துள்ளது.

நாட்டில் இரண்டு குழுக்கள், இதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு சாரார், தெற்கே இருக்கிறார்கள்; மற்றைய சாரார், வடக்கில் இருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, கடந்த முறை வடக்கு-கிழக்கில், தமிழ் மக்களிடம் பெற்ற வாக்குகளில் ஒரு பகுதியை, அதாவது ஐந்தில் ஒரு பகுதியை, கூட்டமைப்பை விடத் தமிழ்த் தேசியத்தைப் பற்றிப் பேசும் இரண்டு கட்சிகள், இம்முறை பெற்றுள்ளன.

சி.வி. விக்னேஸ்வரன் தலைமை தாங்கும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமை தாங்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் இந்த வாக்குகளைப் பெற்றுள்ளன. அதேவேளை, மற்றொரு பகுதி வாக்குகளை டக்ளஸ் தேவாநந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் பெற்றுள்ளன.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் பெற்ற வாக்குகளைப் பார்த்து, தமிழர்கள் சிலர் மகிழ்சியடையும் அதேவேளை, ஈ.பி.டி.பியும் ஸ்ரீ ல.சு.கவும் பெற்ற வாக்குகளைப் பார்த்து, தெற்கில் சிலர் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

ஸ்ரீ ல.சு.க என்பது, பெரும்பான்மையினத் தலைமையுள்ள, பிராந்திய அல்லது, இனத்துவ ரீதியான அரசியலுக்குப் பதிலாக, தேசிய அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாகும்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய ஈ.பி.டி.பி யின் பெயரில், 'ஈழம்' என்ற பதம் இருந்த போதிலும் தமிழ்த் தலைமைத்துவம் இருந்த போதிலும் தமிழர்களே கட்சி உறுப்பினர்களாக இருந்த போதிலும், தமிழ்த் தேசியம் பேசும் கட்சியல்ல! 1987ஆம் ஆண்டு, தனி நாட்டுப் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டதிலிருந்து, அக்கட்சி தேசிய கட்சிகளுடன் இணைந்தே செயற்பட்டு வந்துள்ளது. எனவே, அக்கட்சியும் தேசிய அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே கருத வேண்டியுள்ளது.

அந்தவகையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை விட்டுச் சென்ற வாக்காளர்கள், இரண்டு திசைகளை நோக்கிச் சென்றிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. ஒரு சாரார், தமிழ் கடும்போக்குவாதத்தை நோக்கியும் மற்றவர்கள், தேசிய அரசியலை நோக்கியும் சென்றிருக்கிறார்கள்.

கிழக்கில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன், இம்முறை மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவின் சார்பில், மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார்.

அதேவேளை, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான 'பிள்ளையான்' எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனும் வெற்றி பெற்றிருக்கிறார். இவரும் பொதுஜன பெரமுனவின் தீவிர ஆதரவாளர் ஆவார்.

ஸ்ரீ ல.சு.கவும் ஈ.பி.டி.பியும் வியாழேந்திரனும் பிள்ளையானும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை ஆதரிக்கப் போகிறார்கள் என்பதை அறிந்தே, அக் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர் என்பது, முக்கியமான விடயமாகும்.

பொதுஜன பெரமுன, தமிழ் அரசியல்வாதிகள் நீண்ட காலமாக முன்வைத்து வரும் அரசியல் கோரிக்கைகளை, நிராகரிக்கும் கட்சி என்பது இரகசியம் அல்ல! அவர்கள், அதனை மறைக்க முற்படுவதும் இல்லை.

உதாரணமாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதவிக்கு வந்தவுடன், மேற்கொண்ட இந்திய விஜயத்தின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 13ஆவது அரசமைப்புத் திருத்தம் உள்ளிட்ட அதிகாரப் பரவலாக்கல் முறைமையைப் பலப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால், இந்தியாவிலிருந்தே அதைப் பகிரங்கமாக நிராகரித்த ஜனாதிபதி கோட்டாபய, "அதிகாரப் பரவலாக்கல் முறைமைக்குப் பதிலாக, பொருளாதார அபிவிருத்தியின் மூலமே, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்" எனக் கூறியிருந்தார்.

நடந்து முடிந்த, பொதுத் தேர்தல் பிரசாரக் காலப்பகுதியில், பொதுஜன பெரமுனவின் பல தலைவர்கள், அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தோடு, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தையும் இரத்துச் செய்ய வேண்டும் எனக் கூறிவந்தனர். இவ்வாறு இருக்கத்தக்கதாகத்தான், பொதுஜன பெரமுனவை ஆதரிக்கும் பிள்ளையான், டக்ளஸ், அங்கஜன் போன்றோருக்குத் தமிழ் மக்கள் வாக்குகளை அள்ளி வழங்கி இருக்கிறார்கள்.

இது எதைக் காட்டுகிறது? இவ்வாறு வாக்களித்தவர்கள், தமிழ்த் தலைவர்களின் மரபு ரீதியான அரசியல் சுலோகங்களையும் கோரிக்கைகளையும் நிராகரித்துள்ளனரா? அல்லது, அச்சுலோகங்களையும் கோரிக்கைகளையும் நிறைவேற்றிக் கொள்ள, கடந்த தேர்தல்களில் வாக்களித்ததைப் போலல்லாது இம்முறை, தமது அன்றாட வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது முக்கியம் எனக் கருதி, அவர்கள் இக்கட்சிகளுக்கு வாக்களித்துள்ளனரா?

எவ்வாறு இருந்தாலும், இம்மக்களை அரவணைத்து, அவர்களைத் தேசிய அரசியல் நீரோட்டத்தில் நிரந்தரமாகச் சேர்த்துக் கொள்ள, அரசாங்கத்திடமும் ஆளும் கட்சியிடமும் திட்டம் இருக்கிறதா என்பதே, அடுத்த கேள்வியாகும்.

கடந்த வாரம், தனியார் தொலைக்காட்சி பேட்டியொன்றில், நீதி அமைச்சர் அலி சப்ரியும் இந்தப் பிரச்சினையைப் பற்றி, தமது கருத்துகளைத் தெரிவித்திருந்தார். "தமிழ் மக்கள், இன ரீதியான அரசியலை நிராகரித்து, தேசிய அரசியலில் கலந்து கொள்ள வரும் போது, அவர்களை அரவணைத்துக் கொள்ளும் பக்குவம், அரசாங்கத்திடமும் பெரும்பான்மையின சமூகத்திடமும் இருக்க வேண்டும்" எனக் கூறியிருந்தார்.

அந்தப் பக்குவம் இருக்கிறதா என்ற கேள்வி, அமைச்சரவையை ஜனாதிபதி கோட்டாபய, புதன்கிழமை (12) நியமித்த போதும் எழுந்தது. அந்த நியமனங்களின் போது, முன்னாள் கடற்படை அதிகாரியும் சிவில் பாதுகாப்புப் படையின் முதலாவது பணிப்பாளர் நாயகமுமான சரத் வீரசேகரவுக்கு, மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இது, 2010ஆம் ஆண்டு, மேர்வின் சில்வாவுக்கு ஊடகத்துறை பிரதி அமைச்சர் பதவியை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கியமையை நினைவூட்டியது.

சில ஊடக நிறுவனங்களையும் ஊடகவியலாளர்களையும் தாக்கியதாக மேர்வின் சில்வாவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு இருந்த நிலையிலேயே, அவருக்கு ஊடகத்துறை பிரதி அமைச்சர் பதவியை, மஹிந்த வழங்கினார். அதேபோல், மாகாண சபைகளை வெறுக்கும் ஒருவருக்கே, மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பதவியை, கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியிருக்கிறார்.

பொதுவாக, "இலங்கையில் இனப்பிரச்சினை என்று, ஒன்றும் இல்லை" என்றே, கடும்போக்குக் கொண்ட பெரும்பான்மை இனத்தவர்கள் கூறி வருகின்றனர். எனவே, அவர்களது கண்ணோட்டத்தில், அதிகாரப் பரவலாக்கமோ, அதன் ஒரு வடிவமான மாகாண சபை முறைமையோ அவசியமில்லை. சரத் வீரசேகரவும் இந்த நிலைப்பாட்டிலேயே இருக்கிறார். அவரது பதவிப் பிரமாணத்தின் போது தெரிவித்த கருத்துகளும் இதையே காட்டுகின்றன.

இது, நீதி அமைச்சர் அலி சப்ரியின் நிலைப்பாட்டுக்கு எதிரானதாகும். மேற்படி பேட்டியின் போது, மாகாண சபைகளின் எதிர்காலத்தைப் பற்றி, சப்ரியிடம் கேட்கப்பட்ட போது, "மாகாண சபைகள், இலங்கையின் ஆட்சி இயந்திரத்தில் நன்றாக வேரூன்றிவிட்ட அமைப்பாகும். இலங்கை-இந்திய உடன்படிக்கையின் கீழ், அவை உருவாக்கப்பட்டதால், அவை தொடர்பாக, அரசாங்கத்துக்கு சர்வதேச கடப்பாடொன்று இருப்பதால், அவற்றை ஒழிக்க முடியாது. அதேவேளை, இனப் பிரச்சினையைத் தீர்க்கவே, மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. அவை தொடர்பாகத் தமிழ் மக்கள் திருப்தியடையாத நிலையில், அவற்றை ஒழிப்பதால், அரசாங்கம், தம்மைப் புறக்கணிப்பதாக அவர்கள் உணரக்கூடும். அதன் மூலம், மற்றொரு தமிழ்க் கிளர்ச்சியைத் தோற்றுவிக்கும் அவசியமில்லை" என்றும் அவர் கூறினார்.

இதுபோன்ற விடயங்களில், அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு, தெளிவாக இருக்க வேண்டும். தமிழ் மக்களில் ஒரு சாரார், தேசிய அரசியலின் பக்கம் சாய்வதாகத் தெரிந்த போதிலும், அம்மக்களை அரவணைத்து, நிலையாகவே தேசிய அரசியல் நீரோட்டத்தில் சேர்த்துக் கொள்ள, அரசாங்கம் உணர்வுபூர்வமாக நடவடிக்கை எடுக்காவிட்டால், அம்மக்கள் பழைய நிலைக்கே சென்றுவிட முடியும். அதற்காக அம்மக்களை குறைகூறுவதில் அர்த்தம் இல்லை.





ச. சேகர்

## பன்முகப்படுத்தப்பட வேண்டிய

# இலங்கையின் ஏற்றுமதிசார் துறைகள்

இலங்கையின் ஜுலை மாத ஏற்றுமதி வருமானம், ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை எய்தியிருந்தது என்பது நற்செய்தியாகும். கொவிட்-19 தொற்றுப் பரவலால் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவிலிருந்து மீண்டெழுவதற்கான சிறந்த அடையாளத்தை, இந்த அடைவு வெளிப்படுத்தியுள்ளது.

2020ஆம் ஆண்டில், நாட்டின் ஏற்றுமதித்துறை இந்த மைல்கல் பெறுமதியை எய்திய இரண்டாவது சந்தர்ப்பமாக, இது அமைந்துள்ள போதிலும், உறுதியான வளர்ச்சியைப் பதிவு செய்வதை உறுதி செய்வதற்கு, மேலும் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன.

இலங்கையின் ஏற்றுமதி மூலோபாயத்தில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதனூடாக, நாட்டை உயர் வருமானமீட்டும் பொருளாதாரமாக மாற்றியமைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். குறிப்பாக, வணிகச் சரக்கு ஏற்றுமதி மூலோபாயம், இவ்வாறான மாற்றத்துக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இயந்திர சாதனங்கள், இலத்திரனியல் சாதனங்கள், வாகனங்கள், மருந்துப் பொருள்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட தாதுப்பொருள்கள் போன்றவற்றுடன், பாரம்பரிய உற்பத்திகளான ஆடைகள், தேயிலை போன்றன பன்முகப்படுத்தப்பட வேண்டும்.

ஆசியாவில், வளர்ச்சியைப் பதிவு செய்த நாடாக வியட்நாம் திகழ்கின்றது. விவசாயம், இயற்கை வளங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருள்கள் முதல், ஆடை உற்பத்திகள் வரை தனது ஏற்றுமதிகளை 1990ஆம் ஆண்டுகளின் முற்பகுதியிலிருந்து பன்முகப்படுத்த ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து, 2000ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலிருந்து இலத்திரனியல் சாதனங்களை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தது. இதனூடாக, இன்றைய காலகட்டத்தில், உலகின் உற்பத்தியாளர்கள் வலையமைப்பில், முன்னணி ஏற்றுமதியாளர்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

இலங்கையும் பாரம்பரிய ஏற்றுமதி சந்தைகளுக்கு அப்பால், கவனம் செலுத்த வேண்டியுள்ளது. மேலைத்தேய நாடுகளுக்கான ஏற்றுமதி, மொத்த ஏற்றுமதியில் அரைப்பங்குக்கும் அதிக தொகையைக் கொண்டுள்ளது. இதில் GSP, GSP+ சலுகை போன்றன அடங்கியுள்ளதுடன், முக்கிய பங்களிப்பையும் வழங்குகின்றன.

ஆனாலும், இவ்வாறான அனுகூலங்கள், சலுகைகள் குறுகிய காலப்பகுதிக்கு உரியவையாகும். இலங்கை உயர் மத்திய வருமானமீட்டும் நாடாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் இந்தச் சலுகைகள் இல்லாமல் போவதற்கான வாய்ப்புகளும் அதிகமுள்ளன.

எனவே, வளர்ந்து வரும் ஆசிய நாடுகள், இதர பாரம்பரியமற்ற சந்தைகள் மீது, இலங்கை கவனங்களைச் செலுத்தி, சந்தைகள் குறித்த தனது அணுகுமுறைகளை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

வணிகச் சரக்குகள் ஏற்றுமதியைப் பன்முகப்படுத்துவதற்கு மேலதிகமாக, சேவை ஏற்றுமதிகளை மேம்படுத்துவது தொடர்பிலும் இலங்கை கவனம் செலுத்த வேண்டியுள்ளது. சுற்றுலாத் துறை, தகவல் தொழில்நுட்பம், BPO ஆகிய துறைகளுக்கு மேலாக, சரக்குகள், நிதிச் சேவைகள் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த சேவைகளையும் ஏற்றுமதி செய்வதை மேம்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கொழும்பு வணிக நிதி மய்யம் இயங்க ஆரம்பித்தவுடன், இந்தச் சேவைகளின் ஏற்றுமதிகளினூடாக, இலங்கை, மேலதிக அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அமையும்.

இதர நாடுகளுடன் மூலோபாய அடிப்படையிலான பொருளாதாரப் பங்காண்மைகளை இலங்கை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக, பிராந்தியத்தின் இதர நாடுகளுடன், இதனூடாக ஏற்றுமதியை ஊக்குவித்து, மூலதனம், மனித வளங்களை நகர்த்துவதனூடாகக் கிடைக்கும் அனுகூலங்களை அதிகரித்துக் கொள்ள முடியும்.

ஆசியப் பிராந்தியத்தில் ஏற்றுமதிசார் வளர்ச்சியைப் பதிவு செய்து, வளர்ந்து வரும் முன்னணி பொருளாதார நாடாகத் திகழும் வியட்நாம் போன்ற நாடுகளிலிருந்து, இலங்கை அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மத்தள விமான நிலையத்தினூடாக, இலங்கையின் கொடித் தோடைப் பழங்கள், வெள்ளரிக்காய், சீதாப்பழம் போன்றன, ஓமான் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தமை தொடர்பில் செய்திகள், சில தினங்களுக்கு முன்னதாக வெளியாகியிருந்தன. இதுவும் ஒரு சிறந்த ஆரம்பமாகும்.

1995ஆம் ஆண்டு முதல், வியட்நாம், சில சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டு இருந்ததனூடாக, வியட்நாமின் ஏற்றுமதிக் கட்டணங்களைக் குறைத்துக் கொள்ள முடிந்தது. இதனூடாக, ஏற்றுமதித் துறையின் விரிவாக்கத்துக்கு வழிகோலப்பட்டிருந்ததுடன், பொருளாதாரத்தைப் பலப்படுத்திக் கொள்ளவும் முடிந்தது.

இலங்கை, ஏற்கெனவே தான் கொண்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் உச்சப்பயனை அனுபவிப்பதுடன், நாட்டின் இறையாண்மைக்கும் சுதந்திரத்துக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தாத வகையில், ஏனைய முன்னணி நாடுகளுடன் புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ளவும் வேண்டியுள்ளது.

இவ்வாறான உடன்படிக்கைகளினூடாக, சர்வதேச பெறுமதிச் சங்கிலிகளுடன் உள்நாட்டு ஏற்றுமதியாளர்கள் ஒன்றிணைந்து கொள்ள வாய்ப்பளிப்பதாக அமைவதுடன், சந்தைகளை இலகுவாக அணுகல் வாய்ப்புகளையும் மேம்படுத்துகின்றது. போட்டி, வினைதிறனை ஊக்குவிப்பதுடன், புத்தாக்கத்துக்கும் உதவியளிக்கின்றது.

முக்கியமாக, கடன் சார்ந்திராத நிதிப் பாய்ச்சல் வழிமுறைகளைக் கவர்வது தொடர்பில், இலங்கை அதிகளவு கவனம் செலுத்தி, உள்நாட்டு உற்பத்தியினூடாக இந்த வழிமுறைகளைக் கையாண்டு, உயர் வளர்ச்சியை ஈட்டிக் கொள்ள வேண்டியுள்ளது. இலங்கைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள், கடந்த பத்தாண்டுகளில் அதிகரிப்பைப் பதிவு செய்த போதிலும், பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

குறிப்பாக, முதலீட்டாளர்களுக்கு நட்பான கொள்கைகளை நிறுவியிருந்ததனூடாக, வியட்நாம் கடந்த ஆண்டுகளில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. உற்பத்தி, வியாபாரத் துறைகளுக்குக் குறிப்பிடத்தக்களவு உயர் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை, வெற்றிகரமாகக் கவர்ந்திருந்தது. இலங்கையின் ஏற்றுமதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கு, இவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்துள்ளதுடன், புதிதாகப் பதவியேற்றுள்ள அரசாங்கம், இத்தகைய இலக்குகளை நோக்கி நகரும் என எதிர்பார்ப்போம்.

## பங்குச் சந்தை

CSE COLOMBO STOCK EXCHANGE

2020.08.18

| அனைத்து பங்குகளின் விலைச்சுட்டெண் | S&P SL20 விலைச் சுட்டெண் |
|---|---|
| 5,279.92 | 2,331.14 |

## நாளாந்த பங்குச் சந்தை நிலைவரம்



2020.08.18

TOP 10 விலை உயர்ந்த, சரிவடைந்த நிறுவனங்கள்

| விலை உயர்ந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| ப்ளு டயமண்ட்ஸ் (சாதாரண) | 0.20 | 0.30 | 0.10 |
| இண்ட்ரஸ்ரியல் எசப். | 0.20 | 0.30 | 0.10 |
| நேஷன் லங்கா | 0.70 | 0.80 | 0.10 |
| எல் ஓ எல் சி பின். | 3.30 | 3.70 | 0.40 |
| எக்ஸ்போலங்கா | 4.50 | 5.00 | 0.50 |
| எல் ஓ எல் சி ஹோல்டிங்ஸ் | 143.10 | 156.30 | 13.20 |
| சி டி லேண்ட் | 27.20 | 29.70 | 2.50 |
| எம்பியன் கெப்பிடல் | 4.00 | 4.30 | 0.30 |
| எல் எம் எஃப் | 80.00 | 85.90 | 5.90 |
| ப்ரைம் பின். | 11.20 | 11.90 | 0.70 |

| விலை சரிவடைந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| எஸ் எம் பி லீசிங் (சாதாரண) | 0.30 | 0.20 | (0.10) |
| ப்ளு டயமன்டஸ் | 0.50 | 0.40 | (0.10) |
| டீஸ் அக்ரோ | 0.50 | 0.40 | (0.10) |
| எஸ் எம் பி லீசிங் | 0.50 | 0.40 | (0.10) |
| சொஃப்டலொஜிக் கெப். | 4.70 | 3.90 | (0.80) |
| லெங்கம் சிலோன் | 27.00 | 24.00 | (3.00) |
| சொஃப்டலொஜிக் பின். | 13.00 | 11.80 | (1.20) |
| மஸ்கெலிய | 12.40 | 11.60 | (0.80) |
| ஏசிய கெப்பிடல் | 6.40 | 6.00 | (0.40) |
| களனி வெலி | 69.90 | 65.60 | (4.30) |

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

TT RATES
ISSUED BY: INTERNATIONAL OPERATIONS DEPARTMENT
DATE : 18 AUGUST 2020

| CURRENCY | BUYING RATE | SELLING RATE |
|---|---|---|
| Australian Dollar | 129.51 | 135.62 |
| Canadian Dollar | 136.45 | 141.88 |
| Chinese Yuan (Renminbi) | 25.71 | 27.28 |
| Euro | 214.67 | 222.16 |
| Japanese Yen | 1.70 | 1.77 |
| Singapore Dollar | 131.78 | 136.99 |
| Sterling Pound | 237.41 | 245.15 |
| Swiss Franc | 199.05 | 206.70 |
| US Dollar | 181.49 | 185.79 |

| COUNTRY | CURRENCY | INDICATIVE RATE |
|---|---|---|
| Bahrain | Bahrain Dinar | 486.27 |
| Kuwait | Kuwait Dinar | 599.48 |
| Oman | Oman Rial | 476.12 |
| Qatar | Qatar Riyal | 50.34 |
| Saudi Arabia | Saudi Arabian Riyal | 48.87 |
| UAE | UAE Dirham | 49.90 |

சர்வதேச பெற்றோலிய பொருட்களின் விலை

| சுத்திகரிக்கப்படாத எண்ணெய் | |
|---|---|
| பிரெண்ட் | 45.49 அமெ.டொ. / பீப்பாய் |
| ஒபெக் | 44.94 அமெ.டொ. / பீப்பாய் |

| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் -சிங்கப்பூர் சந்தை | |
|---|---|
| பெற்றோல் | 47.30 அமெ.டொ. / பீப்பாய் |
| டீசல் | 47.96 அமெ.டொ./ பீப்பாய் |
| மண்ணெண்ணெய் | 43.29 அமெ.டொ. / பீப்பாய் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2020 ஒகஸ்ட் 18 இலுள்ளவாறான SLIBOR வீதங்கள்

| | |
|---|---|
| மறு நாள் | 5.53 |
| 7 நாள்கள் | 5.92 |
| 1 மாதங்கள் | 6.05 |
| 3 மாதங்கள் | 6.96 |
| 6 மாதங்கள் | 7.61 |
| 12 மாதங்கள் | 8.50 |

# Kelsey Homesஇன் ‘URBAN HEIGHTS’



வீட்டுமனையாளர்களான Kelsey Homes வத்தளையில் கூடிய இடவசதிகளுடன் 16 வீடுகளைக் கொண்ட ஐந்து அடுக்கு மாடி குடியிருப்பை நிர்மாணித்துள்ளது. இது, பிரத்தியேகமான நுழைவாயிலைக் கொண்டிருப்பதால் பாதுகாப்பானதாகக் காணப்படுகின்றது. உயர் தர வரிசையில் அழகாக வடிவமைக்கப்பட்ட 2, 3 படுக்கையறைகளைக் கொண்டதான அலகுகளை உள்ளடக்கியுள்ளது. குடியிருப்பாளர்களுக்கு 30 நிமிடங்களில் கொழும்பு, துறைமுக நகரை அணுக முடியும். துறைமுக அணுகல் நெடுஞ்சாலை வழியாகவும் புறவட்ட நெடுஞ்சாலை வழியாகவும் குறுகிய நேரத்துக்குள் இலகுவாகக் கொழும்பை சென்றடைய முடியும்.

URBAN HEIGHTS, குடியிருப்பாளர்களுக்கு வசதியானதும் சௌகரியமானதுமான வாழ்க்கை முறையை வழங்குகிறது. இக்குடியிருப்புத் தொகுதியின் வளாகத்தில் பரந்தளவிலான நவீன வசதிகள் காணப்படுகின்றன. அனைத்தும் உள்ளடக்கிய நவீன உடற்பயிற்சிக்கூடம், மொட்டை மாடியில் இருந்து பார்க்கையில் அழகிய கண்கவரும் காட்சிகளுடன் அழகிய கடலின் காட்சியையும் இரசித்திடலாம். அத்தோடு அனைத்துக் குடியிருப்பாளர்களுக்கும் லிப்ட், குப்பை சேகரிக்கும் இடம், மூடப்பட்ட வாகன தரிப்பிடம், 24 மணி நேர பாதுகாப்புச் சேவை போன்றவை காணப்படுகின்றன.

ஒவ்வொரு அலகும் 1,200 +சதுர அடி பரப்பளவைக் கொண்ட விசாலமான இடப்பரப்பைக் கொண்டுள்ளது. அத்தோடு, இதன் விலை ரூபாய் 18.5 மில்லியன் ஆகும். COC (Certificate of conformity) சான்றிதழைப் பெற்றுக் கொண்டுள்ள நிலையில், புதிதாகக் கொள்வனவு செய்வோருக்கு உடனடியாகக் குடியிருக்கத்தக்க நிலையில் இந்த வீடுகள் உள்ளன.

எனவே, வத்தளையை அண்டிய நகரப் பிரதேசத்தில் ஆபத்தற்ற முதலீட்டைச் செய்வதற்கு இது தகுந்த சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. 2020 ஒகஸ்ட் 31ஆம் திகதிக்கு முதல், முற்பதிவு செய்துகொள்ளும் சாத்தியமான கொள்வனவாளர்களுக்கு ரூ. ஒரு மில்லியன் விலைக்கழிவு சலுகை வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

‘வீடொன்றைத் தேர்ந்தெடுத்திடும் போது, மலிவு மற்றும் அணுகல் ஆகியவை கொள்வனவாளர்கள் கருத்திற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான காரணிகளாகும். இவையிரண்டும் URBAN HEIGHTS இனால் வழங்கப்படுகின்றன.

Kelsey Homes ஆனது Kelsey Developments PLC நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். 1983ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்நிறுவனம் வாக்குறுதிகளை நிறைவேற்றும் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனமாகத் திகழ்கின்றது.

# பெருந்தோட்ட நிறுவனங்கள் ரூ. 500 மில். இழப்பைச் சந்திக்கும்





இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்டு விரிவாக்கப்படும் oil palm (எண்ணெய்ப்பனை) பயிர்ச்செய்கைத் துறை தொடர்பில், அரசாங்கத்தின் கொள்கை, முன்னுக்குப் பின் முரணாகவும் தடுமாற்றம் நிறைந்ததாகவும் காணப்படுவதன் காரணமாக, அடுத்த சில மாதங்களுக்குள் பெருந்தோட்ட நிறுவனங்கள், மொத்தமாக 500 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான இழப்பை ஒட்டுமொத்தமாகச் சந்திக்குமென, துறையின் உச்சநிலைத் தொழிற்றுறை சங்கம் எச்சரித்துள்ளது.

எண்ணெய்ப்பனை பயிர்ச்செய்கையை விரிவுபடுத்துவதற்காக, அரசாங்கம் எடுத்த முடிவைத் தொடர்ந்து, 356,000 எண்ணெய்ப்பனைகள் இறக்குமதி செய்யப்பட்டன எனத் தெரிவித்த The Palm Oil Industry Association - POIA, எனினும் தவறாக வழிநடத்தப்பட்ட செயற்பாட்டாளர்களாலும் தன்னல அதிகாரத் தரகர்களாலும் பரப்பப்படும் பொய்களாலும் எழுந்துள்ள சவால்களை எதிர்கொள்வதற்குப் போதுமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்காததன் காரணமாக, மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக, அந்த எண்ணெய்ப்பனைகள், செடிகொடிகள் வளர்க்கப்படும் பண்ணைகளில் முதிர்ச்சியடைந்து வருகின்றன எனத் தெரிவித்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த எண்ணெய்ப்பனைத் தொழிற்றுறைச் சங்கத்தின் தலைவர் கலாநிதி றொஹான் பெர்ணான்டோ, “இம்மரங்களில் கிட்டத்தட்ட 40 சதவீதமானவை, ஏற்கெனவே பயன்படுத்த முடியாத அளவுக்கு மாறியிருக்கலாம் என்பதோடு, இவ்விடயத்தில் அரசாங்கம் விரைந்து செயற்பட்டுத் தீர்வுகாணாவிட்டால், அடுத்த இரண்டு மாதங்களுக்குள் அனைத்து மரங்களுமே முற்றாக அழிக்கப்பட வேண்டியேற்படும் என அஞ்சுகிறோம்” எனத் தெரிவித்தார்.

எண்ணெய்ப்பனைகளைப் பயிரிடுவோர், சுத்திகரிப்போர், பதப்படுத்துவோர், எண்ணெய்ப்பனையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஏனைய பொருள்களின் உற்பத்தியாளர்கள், சந்தைப்படுத்துவோர், விற்பனையாளர்கள் ஆகியோரை, எண்ணெய்ப்பனைத் தொழிற்றுறைச் சங்கம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இவர்கள் அனைவரும் இணைந்து, இத்தொழிற்றுறையில் 26 பில்லியன் ரூபாயை முதலிட்டுள்ளனர். இலங்கையில் இப்போது 11,000 ஹெக்டேயர்களுக்குக் குறைவான நிலத்திலேயே எண்ணெய்ப்பனைகள் பயிரிடப்பட்டுள்ளதோடு, தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவை பயிரிடப்படும் பரப்பளவின் ஒரு சதவீதமாக இது உள்ளது. கடுமையாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒழுங்குமுறைகளின்கீழ், எண்ணெய்ப்பனைகளின் பயிர்ச்செய்கை அளவை 20,000 ஹெக்டேயர்களாக அதிகரிப்பதற்குப் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு ஆணையளிக்கப்பட்டது. சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், இத்தொழிற்றுறையை முன்னெடுக்க மேற்படி ஒழுங்குமுறைகள் பின்பற்றப்பட இருந்தாலும், அத்திட்டத்திலிருந்து அரசாங்கம் பின்வாங்கியது.

உள்நாட்டு பாம் எண்ணெய் உற்பத்தித் தொழிற்றுறை மீது முன்வைக்கப்படும் அடிப்படையற்ற பொய்ப்பிரசாரங்கள் காரணமாக, ஆண்டுக்கு வெறுமனே 23,000 தொன், பாம் எண்ணெயை மாத்திரமே நாடு உற்பத்தி செய்ததோடு, ஒவ்வோர் ஆண்டும் மிகப்பெரிய எண்ணிக்கையான 220,000 தொன் கச்சா பாம் எண்ணெயை இறக்குமதி செய்வதால், 22 பில்லியன் ரூபாய் செலவிடுகிறது.

நாட்டில் பாம் எண்ணெய் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் எடுத்த முடிவின்படி, எந்தவிதமான சுற்றுச்சூழல் பாதிப்புகளும் காடழிப்பும் சாத்தியமான பயிர்கள் அகற்றப்படுவதும் நடைபெறாது. எனினும், மலேஷியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் ஒழுங்கு முறைமையின்றி பயிரிடப்பட்ட எண்ணெய்ப்பனைச் செய்கையைப் பயன்படுத்திய தரகர்கள், 50 ஆண்டுகளில் 11,000 ஹெக்டேயர்களுக்கும் குறைவான அளவிலேயே எண்ணெய்ப்பனையை இலங்கை பயிரிட்டுள்ளது என்பதைக் கருத்திலெடுக்காமல், இந்தத் தொழிற்றுறை தொடர்பில் அடிப்படையற்ற பய உளவியலை ஏற்படுத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# நிவேதா தாமஸின் எதிர்பார்ப்பு

சமுத்திரகனி இயக்கிய 'போராளி' திரைப்படம் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமான நிவேதா தாமஸ், பின்னர் 'ஜில்லா' திரைப்படத்தில் விஜய்யின் தங்கையாக நடித்தார்.

தொடர்ந்து 2015ஆம் ஆண்டு வெளியான 'பாபநாசம்' திரைப்படத்தில் கமலின் மகளாக நடித்திருந்தார். இதையடுத்து தெலுங்கு திரைப்படங்களில் கவனம் செலுத்தி வந்த நிவேதா தாமஸ், 4 ஆண்டுகளுக்கு பின் 'தர்பார்' திரைப்படம் மூலம் ரீ-என்ட்ரி கொடுத்தார்.

இந்த நிலையில், அவர் அளித்துள்ள செவ்வியில், "வாழ்க்கையில் எல்லோரும் காதலிக்க வேண்டும் என்ற அவசியமோ, திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற கட்டாயமோ இல்லை. நான் நேரம் வரும்போது சந்தோஷமாக திருமணம் செய்து கொள்வேன். இப்போது எனக்கு திருமணம் பற்றிய எண்ணம் இல்லை. காதலிக்க நேரமும் இல்லை.

வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடிக்க வேண்டும். எதிர்காலத்தில் இயக்குநராக வேண்டும் என்ற கனவுகளோடு நான் இருக்கிறேன். ஆனால் வரப்போகிற கணவர் எப்படி இருக்க வேண்டும் என்பதில் சில எதிர்பார்ப்புகள் வைத்துள்ளேன்.

அவர் உண்மையாக இருக்க வேண்டும். யாரும் உண்மையாக இருப்பவர்களைத்தான் விரும்புவர். இல்லாதபோது ஒருமாதிரி பேசி விட்டு நேரில் வேறு மாதிரி பேசுபவர்களை பிடிக்காது. கணவராக வருகிறவர் எனது பொறுப்புகளை பகிர்ந்துகொள்பவராகவும், பயணம் செய்வதில் விருப்பம் உள்ளவராகவும் இருக்க வேண்டும்" இவ்வாறு நிவேதா தாமஸ் கூறியுள்ளார்.



## முந்தானை முடிச்சில் நடிக்க

# அனுஷ்கா மறுப்பு

'முந்தானை முடிச்சு-2' திரைப்படத்தில் அனுஷ்கா நடிக்க மறுப்பு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் வெற்றி பெற்ற திரைப்படங்களின் இரண்டாம் பாகம் தயாராகி வருகின்றது. அதில், 'முந்தானை முடிச்சு' திரைப்படமும் ஒன்று.

இது, 1983ஆம் ஆண்டில் திரைக்கு வந்தது. அந்தத் திரைப்படத்தில் பாக்யராஜ் கதாநாயகனாக நடித்து, இயக்கி இருந்தார்.

திரைப்படம் மிகப்பெரிய வெற்றியை பெற்றதால் தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில், 'ரீமேக்' செய்யப்பட்டது.

இந்த நிலையில், 'முந்தானை முடிச்சு-2' திரைப்படத்தில் சசிகுமார் கதாநாயகனாக நடிக்க இருப்பதாக பேசப்படுகிறது. கதாநாயகியாக நடிக்க அனுஷ்காவை அணுகியதாகவும், அதற்கு அனுஷ்கா மறுத்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

தனக்கு விரைவில் திருமணம் நடைபெற இருப்பதாகவும், அதனால் புதிய திரைப்படங்களை ஏற்கவில்லை என்று அவர் கூறியதாகவும் சொல்லப்படுகிறது.



# நடிகையிடம் கைவரிசை

தென்னிந்திய நடிகைகளில் ரசிகர்களின் மனம் கவர்ந்த நடிகைளில் ஒருவர் ஈஷா ரெப்பா. 2012ஆம் ஆண்டு 'லைஃப் இஸ் பியூட்டிஃபுல்' என்ற திரைப்படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமானார்.

தொடர்ந்து தெலுங்கு திரைப்படங்களில் நடித்து வந்தவர், 2016ஆம் ஆண்டு வெளியான 'ஓய்' என்ற தமிழ் படத்தில் அறிமுகமானார். தெலுங்கில் பிஸியாக இருக்கும் ஈஷா ரெப்பா, கடந்த ஆண்டு தமிழில் ஜி.வி.பிரகாஷுக்கு நாயகியாக 'ஆயிரம் ஜென்மங்கள்' திரைப்படத்தில் நடித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சினிமா தொழில் முற்றிலும் முடங்கி போய் கிடக்கிறது. இதனால் நடிகர், நடிகைகளின் ஒரே பொழுதுபோக்காக சமூக வலைதளங்கள் மாறியுள்ளன.

இந்த நிலையில், நடிகை இஷா ரெப்பாவின் ட்விட்டர் கணக்கு இப்போது ஹேக் செய்யப்பட்டுள்ளது. ட்விட்டரில் எக்டிவாக இருக்கும் இஷாவின் கணக்கை யாரோ சிலர் முடக்கி வைத்துள்ளனர்.

இதற்கு முன், நடிகைகள் அனுபமா பரமேஸ்வரன், ஷோபனா, ஊர்வசி ரவ்தெலா உள்பட பல நடிகைகளின் கணக்குகள் ஹேக் செய்யப்பட்டன. இதுபற்றி அப்போது அவர்கள் தெரிவித்து இருந்தனர். பின்னர் அந்த கணக்குகள் மீட்கப்பட்டதாக அவர்கள் அறிவித்திருந்தனர்.

# முகாமையாளரை நீக்கிய பார்சிலோனா

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனா, தமது முகாமையாளர் குய்க் ஸ்டெய்னை நீக்கியுள்ளது.

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக்கின் காலிறுதிப் போட்டியொன்றில் 8-2 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சால் தோற்கடிக்கப்பட்ட மூன்று நாள்களிலேயே நேற்று முன்தினம் குய்க் ஸ்டெய்னை பார்சிலோனா நீக்கியுள்ளது.

இந்நிலையில்,



பார்சிலோனாவுக்காக 1989ஆம் ஆண்டு தொடக்கம் 1995ஆம் ஆண்டு வரை விளையாடிய நெதர்லாந்து சர்வதேச கால்பந்தாட்ட அணியின் முகாமையாளரான றொனால்ட் கோமன், குய்க் ஸ்டெய்னை பார்சிலோனாவில் பிரதியீடு செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் நாள்களில் புதிய பயிற்சியாளரொருவர் அறிவிக்கப்படுவார் என பார்சிலோனா தெரிவித்துள்ளது.

நடப்பு லா லிகா பருவகாலத்தில் வைரிகளான றியல் மட்ரிட்டுக்கு பின்னால் ஐந்து புள்ளிகள் பின்தங்கி இரண்டாமிடத்தையே பார்சிலோனா பிடித்ததுடன், பயேர்ண் மியூனிச்சால் கடந்த சனிக்கிழமை தோற்கடிக்கப்பட்டமையானது ஐந்து ஆண்டுகளில் காலிறுதிப் போட்டிகளில் வெளியேற்றப்படும் நான்காவது தடவையாகும்.

## யூரோப்பா லீக்:

# இறுதிப் போட்டியில் இன்டர் மிலன்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் இறுதிப் போட்டிக்கு இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் தகுதிபெற்றுள்ளது.

ஜேர்மனியின் டுஸல்ஃபோர்ட்டில் நேற்று அதிகாலை நடைபெற்ற உக்ரேனியக் கழகமான ஷக்தார் டொனெஸ்ட்ஸ்க்குடனான அரையிறுதிப் போட்டியில் வென்றதன் மூலமே இறுதிப் போட்டிக்கு இன்டர் மிலன் தகுதிபெற்றுள்ளது.

இப்போட்டியின் 19ஆவது நிமிடத்தில் இன்டர் மிலனின் முன்களவீரர் லொட்டரோ மார்ட்டின்ஸ் பெற்ற கோலின் மூலம் முன்னிலை பெற்ற இன்டர் மிலன், போட்டியின் முதற்பாதி முடிவில் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றுக் காணப்பட்டது.

இந்நிலையில், போட்டியின் 64ஆவது நிமிடத்தில் தமது மத்தியகளவீரர் டனிலோ டி அம்புறோசியோ பெற்ற கோலின் மூலம் தமது முன்னிலையை இரட்டிப்பாக்கிய இன்டர் மிலன், அடுத்த 10ஆவது நிமிடத்தில் லொட்டரோ மார்ட்டின்ஸ் பெற்ற கோலோடு 3-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

பின்னர், அடுத்த நான்காவது நிமிடத்திலும், அதற்கடுத்த ஐந்தாவது நிமிடத்திலும் தமது இன்னொரு முன்களவீரர் றொமேலு லுக்காக்கு பெற்ற கோலின் மூலமாக இறுதியில் 5-0 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 19 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

AUGUST 19, 2020
WEDNESDAY
VOL: 006/076
RS. 10.00
LATE CITY

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror




நான்கு நாள்களுக்கு 4 வலயங்களில்

# ஒரு மணிநேரம் மின் துண்டிப்பு

நாடளாவிய ரீதியில், நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலம் மின்சாரம் துண்டிக்கப்படுமென அறிவித்துள்ள இலங்கை மின்சார சபை, இந்த மின்துண்டிப்பு நான்கு நாள்களுக்கு மட்டுமே அமல்படுத்தப்படுமென அறிவித்தல் விடுத்துள்ளது.

நேற்று (18) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த மின்துண்டிப்பு, நாடளாவிய ரீதியில் நான்கு வலயங்களாக பிரிக்கப்பட்டு, நான்கு சந்தர்ப்பங்களில் அமல்படுத்தப்படுமென, இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் கீர்த்தி கருணாரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 'கைவிலங்கை உடைத்து வெளியே வருவேன்'


க. விஜயரெத்தினம்



நாடாளுமன்ற உறுப்பினரான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும், முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்கு, நேற்று (18) அழைத்துவரப்பட்டார்.

தொடர்ச்சி P2

## நுரைச்சோலை செயலிழந்தது




நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையம் மீண்டும் செயலிழந்துவிட்டது.

நேற்றுமுன்தினம் திடீரென ஏற்பட்ட மின் தடை காரணமாகச் செயலிழந்திருந்த, மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள், வழமைக்குத் திரும்பவில்லையெனத் தெரிவித்த இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன, எவ்வாறாயினும், இந்த மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் வழமைக்குத் திருப்புவதற்கு இன்னும் நான்கு நாள்கள் ஆகும் என்றார்.

தொடர்ச்சி P2

## மின்சாரம் தடைபட்டது ஏன்?; 7 நாள்களுக்குள் அறிக்கை



முழு நாட்டையும் பகலிலேயே இருட்டாக்கி, தடைபட்டிருந்த மின்சாரம், நேற்று முன்தினம் இரவே, வழமைக்குத் திரும்பிவிட்டதெனத் தெரிவித்த மின்சக்தி அமைச்சு, மின் விநியோகம் தடைப்பட்டமை தொடர்பிலான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட 9 பேர் அடங்கிய குழு, 7 நாள்களுக்குள் அறிக்கையிடுமென்றது.

பேராசிரியர் ராஹூல அதலகேயின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள

தொடர்ச்சி P2

## முதல் அமர்வில் பங்கேற்க பிள்ளையானுக்கு அனுமதி

எம்.எஸ்.எம். நூர்தீன், ரீ.எல். ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய (54,198) விருப்பு வாக்குகளைப் பெற்ற, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர், 'பிள்ளையான்' என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு, நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் பங்கேற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிள்ளையானின் சட்டத்தரணிகளான யு.ஏ. நஜீம், ஏ. உவைஸ்,

தொடர்ச்சி P2


## 'ரத்தரன்' செய்தி பொய்

தென்மாகாணத்தின் முன்னாள் உறுப்பினர் 'ரத்தரன்' என்றழைக்கப்படும் கிரிஷாந்த புஷ்பகுமார என்பவர் தொடர்பில் வெளியான செய்தி, போலியானதென, அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, தனது கடமைகளை நேற்று (18) பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிலையில், விளையாட்டுத்துறை அமைச்சுக்கு நேற்று முன்தினம் (17) சென்றிருந்த அவர்,

தொடர்ச்சி P2

## 'நடுவில் பிளாஸ்டர் ஒட்டுவது சரிவராது'



முதன்முறையாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்ட நாமல் ராஜபக்ஷ, விளையாட்டு சட்டத்தை முழுமையாகத் திருத்தவேண்டும். அச்சட்டத்தில், ஆங்காங்கே, இடைநடுவில் அவ்வப்போது 'பிளாஸ்டர்' ஒட்டுவது சரிவராது என்றார்.

இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட நாமல் ராஜபக்ஷ, தனது கடமைகளை நேற்று (18) பொறுப்பேற்றுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## '2/3ஐ இழக்கச் செய்ய சு.கவுடன் பேசுவோம்'



அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்கக் கூடாதெனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இல்லாமல் செய்வதற்கு, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் பேசுவோம் என்றார்.

தொடர்ச்சி P2

என்னைத் தலைவராக்கினால்

## 'ஐ.தே.கவை வெற்றிப்பாதைக்குக் கொண்டுச் செல்வேன்'

### சஜித்துடன் இணையவும் பேச்சு



ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் தன்னிடம் வழங்கப்படும் பட்சத்தில், அக்கட்சியை மீட்டெடுத்து வெற்றிப் பாதைக்குக் கொண்டுச் செல்ல தன்னால் முடியும் என்று, முன்னாள் இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துவரும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவில், நேற்று (18) ஆஜராகி 5 மணிநேரம் வாக்குமூலமளித்ததன் பின்னர் ஊடங்களுக்குக் கருத்துரைத்த அவர்,

தொடர்ச்சி P2

## அமரர் தொண்டமானின் பூர்வீக இல்லத்தில் தீ



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்குச் சொந்தமான கொத்மலை, வேவண்டனில் உள்ள பூர்வீக இல்லத்தில், நேற்று (18) அதிகாலை 2.30 மணியளவில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

நுவரெலியா மாநகர சபை, ஹட்டன்- டிக்கோயா நகர சபை ஆகியவற்றின் தீயணைப்பு

தொடர்ச்சி P2

பொலிஸ் அதிகாரிகளை

## டுபாயிலிருந்து வழிநடத்திய போதைப்பொருள் வியாபாரி

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் தொடர்புபட்டதாகக் கூறப்படும், போதைப்பொருள் விநியோகச் செயற்பாடுகள் டுபாயிலிருக்கும் "உதார சம்பத்" என்பவராலேயே முன்னெடுக்கப்பட்டுள்ளனவென, பிரதி சொலிசிட்டர் ஜெனரால், கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று (18) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

1 பில்லியன் ரூபாய் பெறுமதியான

## போலி நாணயத் தாள் பொதிகளுடன் மூவர் கைது

எப்.முபாரக்



போலியாகத் தயாரிக்கப்பட்ட நாணயத்தாள்கள் அடங்கிய 128 பொதிகளுடன், மூன்று பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முல்லேரியா, கல்வான பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் அடங்கிய குழுவால், காரொன்று

தொடர்ச்சி P2

சிங்கராஜா வன விவகாரம்:

## வீதி அபிவிருத்தியை நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு



சிங்கராஜா வனம் மற்றும் உலக பாரம்பரிய தளத்துக்கு அண்மித்ததாக முன்னெடுக்கப்படும் வீதி அபிவிருத்தி திட்டங்களை தற்காலிகமாக நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாப ராஜபக்ஷ, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஒரு மணிநேரம் மின் துண்டிப்பு

அதனடிப்படையில், மாலை 6 மணிமுதல் இரவு 7 மணிவரை, இரவு 7 மணி முதல் இரவு 8 மணிவரை, இரவு 8 மணி முதல் இரவு 9 மணி முதல் இரவு 10 மணிவரையிலும் நாடளாவிய ரீதியில், பல பிரதேசங்களில் மின்சாரம் துண்டிக்கப்படும். மின் பிறப்பாக்க கட்டமைப்பில் மின்சார உற்பத்தி வழமைக்கு திரும்பும் வரையிலும் நான்கு நாள்களுக்கு மாத்திரம் மின்சார விநியோகத்தைத் துண்டிக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

# நுரைச்சோலை செயலிழந்தது

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்குள் காணப்படும் தானியங்கி குளிர்மையாக்கல் இயந்திரத்தின் செயற்பாடுகள், திடீரென ஏற்பட்ட மின் தடை காரணமாகச் செயலிழந்தன என்றார்.

இதனால், அந்த மின்னுற்பத்தி நிலையத்தில் உற்பத்திச் செய்யப்படும் 810 மெகாவோட் மின்சாரம், தேசிய மின்சார கட்டமைப்புக்குக் கிடைக்காமல் போயுள்ளதோடு, இந்நிலைமை காரணமாக, நாட்டின் அவசர மின் விநியோகச் செயற்பாடுகளில் தடங்கல்கள் ஏற்படக்கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள், வழமைக்குத் திரும்புவதற்கு நான்கு நாள்கள் செல்லும் என, மின்சார சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

# மின்சாரம் தடைபட்டது ஏன்?; 7 நாள்களுக்குள் அறிக்கை

குழுவே, மின் விநியோகம் தடைப்பட்டமை குறித்து ஆராய்ந்து 7 நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமெனத் தெரிவித்த மின்சக்தி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, அந்தக் குழுவின் முதற் கூட்டம் நேற்று (18) காலை 8.30 மணிக்கு நடைபெற்றது என்றார்.

இதேவேளை, மின் விநியோகம் துண்டிக்கப்பட்டமை தொடர்பில் 3 நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபையிடம் கோரியுள்ளதாகத் தெரிவித்த இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித்த குமாரசிங்க, இந்த விடயம் தொடர்பில், முழுமையான அறிக்கையை ஒரு மாதத்துக்குள் வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது என்றார்.

"தடைப்பட்ட மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்பினாலும், தொழில்நுட்பக் கோளாறு தொடர்பில் தொடர்ந்தும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன்றன" என அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதால், நீர் விநியோகத்துக்கும் இடையூறு ஏற்பட்டிருந்தது. அதனை வழமைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் நீர் விநியோகம் வழமைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனினும், நீர் விநியோகம் துண்டிக்கப்பட்ட பகுதிகளுக்கு பௌசர் மூலம் நீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அச்சபை தெரிவித்துள்ளது.

மின்பிறப்பாக்கி கட்டமைப்பில் நேற்று முன்தினம் (17) நண்பகல் 12.35 மணியளவில் கோளாறு ஏற்பட்டதைத் தொடர்ந்து, நாடளாவிய ரீதியில் மின் விநியோகம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2016ஆம் ஆண்டின் பின்னர் நாடளாவிய ரீதியில் முதன்முறையாக நேற்று முன்தினம் (17) மின்சார விநியோகத்துக்குத் தடை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 'கைவிலங்கை...

நீதிமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் போடப்பட்டிருந்தன. அத்துடன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவாளர்கள், அங்கு திரண்டிருந்தனர்.

நாடாமன்றத்துக்கு நாளை (20) செல்வதற்கான அனுமதியை கோரி, தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் மனுமீதான விசாரணைக்காக, சிறைச்சாலையிலிருந்து அழைத்துவரப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தன், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்நிலையில், நீதிமன்ற வளாகத்தில் குழுமியிருந்த ஊடகவியலாளர்களை பார்த்து, கை விலங்குகளை உடைத்துக்கொண்டு, விரைவில் வெளியேவந்து அனைவருடனும் பேசுவேன் என்றார்.

# 'ரத்தரன்' செய்தி பொய்

விளையாட்டுத்துறை அமைச்சின் பெயர்ப் பலகையில் காணப்பட்ட தமிழ்ப் பிழையைத் திருத்துமாறு பணித்தார்.

இந்நிலையில், இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் தனிப்பட்ட ஒருங்கிணைப்புச் செயலாளராக, 'ரத்தரன்' நியமிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி சமூக வலைத்தளங்களில் உலாவின. அதையே, அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் ஊடகப்பிரிவு மறுத்துள்ளது.

# முதல் அமர்வில் பங்கேற்க பிள்ளையானுக்கு அனுமதி

திருமதி மங்கேஸ்வரி சங்கர் ஆகியோரால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில், நேற்று (18) தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் மனுவை ஆராய்ந்த, மட்டக்களப்பு மேல் நீதிமன்ற மேலதிக நீதிபதி டி. சூசை தாசன், அதற்கான அனுமதியை வழங்கியதுடன், முதலாவது நாடாளுமன்ற அமர்வுக்கு அழைத்துச் செல்லுமாறு, மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு, நாளை (20) காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. முதலாவது கூட்டத்தொடர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், அன்றையதினம் மாலை 3 மணிக்கு ஆரம்பித்துவைக்கப்படும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கத்தின் கொலை வழக்கில், கைதுசெய்யப்பட்ட பிள்ளையான், வழக்கின் 3ஆவது சந்தேக நபராகப் பெயர் குறிக்கப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், மட்டக்களப்பு சிறைச்சாலையில் நீண்டகாலமாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

> **கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன், வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது, சபாநாயகர் கலரிக்கு முதன்முறையாக வந்திருந்தார்**

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன், வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது, சபாநாயகர் கலரிக்கு முதன்முறையாக வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'நடுவில் பிளாஸ்டர் ஒட்டுவது சரிவராது'

அதன்போது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குடும்ப அங்கத்தவர்கள் பிரசன்னமாய் இருந்தனர்.

அங்கு கருத்துரைத்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, "1973ஆம் ஆண்டு விளையாட்டு சட்டம்தான், நான்கு தடவைகள் திருத்தப்பட்டு, தற்போதிருக்கின்றது. நான் நினைக்கின்றேன், புதிய விளையாட்டு சட்டமொன்றை நாட்டுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். முழுமையான திருத்தங்களை மேற்கொள்ளாது. இடைநடுவில், ஆங்காங்கே பிளாஸ்டர்களை ஒட்டுவது உசிதமானது அல்ல" என்றார்.

"ஜனாதிபதி, பிரமரின் ஆலோசனையின் பிரகாரம், சட்டத்தரணிகள் சங்கம், சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு ஆகியவற்றுடன் பேச்சுவார்தை நடத்தி, விளையாட்டுச் சட்டத்தை நாங்கள் புதிதாக உருவாக்க வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு, விளையாட்டை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்லவேண்டும்" என்றார்.

மிகப்பழைய விளையாட்டுச் சட்டத்தை வைத்துகொண்டு நாமிருக்கின்றோம். அந்த ஒழுங்கு விதிக்குள் எம்மால் இன்னுமிருக்க முடியாது. எங்களுடைய இளைஞர் யுவதிகளுக்குத் தேவையான, உலக வேலைவாய்ப்புச் சந்தைக்குப் பொருத்தமான இளைஞர்களை நாங்கள் உருவாக்கவேண்டும் எனத் தெரிவித்த அவர், அதற்குத் தேவையான தொழில் பயிற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

தொழிற்றுறை பயிற்சி சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களாக இருக்கலாம்; கல்வி மறுசீரமைப்பாக இருக்கலாம்; அத்துடன், ஒழுக்கம், கலாசாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு மேற்படி விடயங்களை, எதிர்காலத்தில் அமைச்சின் மூலம் செயற்படுத்த முடியுமென நம்புகின்றேன் என்றார்.

# அமரர் தொண்டமானின்...

படைப்பிரிவுக்குச் சொந்தமான தீயணைப்பு இயந்திரங்கள் அடங்கிய வாகனங்களைக் கொண்டு, தீப்பரவலை வியாபிக்கவிடாது, முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும், அந்த வீட்டின் கூரை தீக்கிரையாகி முழுமையாகச் சேதமடைந்துவிட்டது என, கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தைக் கேள்வியுற்றதும், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வனான இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

தீப்பரவலுக்கான காரணம், இதுவரையில் கண்டறியப்படவில்லை எனத் தெரிவித்த கொத்மலை பொலிஸார், சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்தனர்.

தீப்பரவலால், அந்தப் பூர்வீக இல்லத்திலிருந்த சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பிலான விவரம் இன்னும் மதிப்பிடப்படவில்லை.

# போலி நாணயத் தாள் பொதிகளுடன் மூவர் கைது

நேற்றுமுன்தினம் (17) சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, அக்காரில் இருந்த மூவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

5,000 ரூபாய் நாணயத்தாளில் ஒருபக்கத்தை மட்டுமே அச்சடித்து, அவ்வாறான நாணயத்தாள்களின் இரண்டு பக்கங்களும் கீழேயும் மேலேயும் இருக்கும் வகையில், அந்த 128 பொதிகளும் தயாரிக்கப்பட்டு, பொதியிடப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், ஜா-எல, அங்கொட, முல்லேரியா ஆகிய இடங்களை வசிப்பிடங்களாகக் கொண்டவர்கள் எனத் தெரிவித்த முல்லேரியா பொலிஸார், அவர்கள் பயணித்த கார், பொலிஸாரின் பொறுப்பில் கொண்டுவரப்பட்டுள்ளது என்றனர்.

அந்த 128 பொதிகளிலும் இருந்த போலி நாணயத்தாள்களின் பெறுமதி ஒரு பில்லியன் (100 கோடி) ரூபாயென மதிப்பிடப்பட்டுள்ளது என்றனர்.

இதேவேளை, திருகோணமலை - மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய 17 போலி நாணயத்தாள்களை வைத்திருந்த 21 வயது இளைஞனை, இம்மாதம் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மூதூர் நீதவான் எம்.எஸ்.எம். சம்சுதீன், நேற்று முன்தினம் (17) உத்தரவிட்டார்.

# '2/3ஐ இழக்கச் செய்ய சு.கவுடன் பேசுவோம்'

இம்முறை அமைச்சரவை தெரிவில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பின்தள்ளப்பட்டுள்ளனர். ஆனால், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

ஊடகமொன்றுக்குக் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அவர், "இவ்வாறான நிலைமையின் கீழ், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியினர், அரசாங்கத்துக்குள் எவ்வாறு இருக்கின்றனர்" எனக் கேள்வியெழுப்பினார்.

19ஆவது திருத்தத்தில் கையை வைப்பதற்கு அரசாங்கத்துக்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாதெனத் தெரிவித்த அவர், அதற்காக, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியுடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்றார்.

# வீதி அபிவிருத்தியை நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு

சிங்கராஜா வனத்தின் நடுவே, வீதியொன்று அமைக்கப்பட்டு வருவதால், சிங்கராஜா வனத்துக்கும் அதனை அண்மித்த பாரம்பரிய தளங்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருவதாக, பொதுமக்களும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகளும் முறையிட்டு வருகின்றன.

இந்த வனத்தின் இயற்கை தன்மையை அழிக்கும் வகையில், வீதி அமைக்கப்பட்டு வருவதாகவும் அதற்காக, கன ரக இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் இயற்கை சுற்றாடல் அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

எனவே, இவ்விடயத்தில் அவதானம் செலுத்தி, காடழிப்பை தடுத்து நிறுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையிலே, அச்செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணித்துள்ளார்.

# 'ஐ.தே.கவை வெற்றிப்பாதைக்குக் கொண்டுச் செல்வேன்'

அப்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட விரிசல் காரணமாகவே, ஈஸ்டர் தாக்குதல் குறித்த முன்னெச்சரிக்கை, ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும், 52 நாள் அரசாங்கம் உருவாக்கப்பட்டதால் அரசியல் செயற்பாடுகளில் தளர்வு நிலை உருவாகியிருந்ததெனவும் வாக்குமூலமளித்ததாகக் கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் தனக்கு வழங்கப்படும் பட்சத்தில் அக்கட்சியை வெற்றிப் பாதைக்குக் கொண்டுச் செல்ல தன்னால் முடியுமெனத் தெரிவித்துள்ள அவர், கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க இளைஞர் ஒருவருக்கு கட்சியின் தலைமைப் பதவியை விட்டுக்கொடுப்பார் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

அத்தோடு ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவதுத் தொடர்பாகவும் பேச்சுகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

அதேநேரம் மேற்படி ஆணைக்குழு நேற்றைய தினம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷாணி அபேசேகரவிடத்திலும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவிடவும் காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 2.30 மணி வரையில் இருவேறு இடங்களில் வாக்குமூலம் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டுபாயிலிருந்து வழிநடத்திய போதைப்பொருள் வியாபாரி

"உதார சம்பத்" என்பவர் பூசா சிறைச்சாலைக்குள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் "பொடி லேஸி" என்பவரின் உறவினர் எனவும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரால் மன்றில் அறிவித்தார்.

அத்தோடு, இந்த விவகாரத்தில் தொடர்புபட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் 13 பேரையும் அங்குணகொலபெலெஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்பதோடு, கொவிட் - 19 பரவல் அச்சுறுத்தல் காரணமாக அவர்களை மன்றில் ஆஜர்படுத்த முடியவில்லை எனவும் அறிவித்தார்.

இந்நிலையில், இதுவரையில் 23 பொலிஸ் அதிகாரிகள் குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் தடுத்துவைத்து விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்றும் மேற்படி அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட 130 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் "டயில் சமிந்த" எனப்படும் போதைப்பொருள் வியாபாரியிடம் கையளிக்கப்பட்டுள்ளனவெனவும், மேலும், 40 கிலோ ஹெரோயின் நாடாளுமன்ற வீதியில் வைத்து மற்றொருவரிடம் கையளிக்கப்பட்டுள்ளதெனவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் மன்றில் அறிவித்தார்.

இது தொடர்பாக மெனிக் எனப்படும் போதைப்பொருள் வியாபாரியையும் அவருடைய வாகன சாரதியையும் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்திய போது, மேற்படி போதைப்பொருளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் மாத்தறையிலுள்ள தனிமைப்படுத்தல் பகுதியொன்றிலிருந்து பெற்றுக்கொண்டு அவற்றை அதிவேக வீதியூடாக பாதுகாப்பாக கொழும்புக்குக் கொண்டு வந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின்

# ‘பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு அமெரிக்கா ஒத்துழைக்கும்’

இலங்கையின் பொருளாதார, வணிக, நிர்வாக, பாதுகாப்புச் செயற்பாடுகளில் ஒத்துழைத்துச் செயற்பட விரும்புவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் எலெய்னா டெப்லிஸ் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் தொடர்பில் கலந்தாலோசிக்கும் நோக்கில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் எலெய்னா டெப்லிஸ், பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவை நேற்று முன்தினம் (17) சந்தித்துக் கலந்துரையாடினார்.



தனித்துப் பாரிய வெற்றியை பெற்றுக்கொண்டமைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு, தூதுவர் எலெய்னா டெப்லிஸ் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார்.

அத்தோடு, இம்முறை நாடாளுமன்ற தேர்தல் நீதியான முறையில் நடைபெற்றுள்ளதெனச் சுட்டிக்காட்டியிருந்த அவர், முன்னைய ஆட்சியை மக்கள் புறக்கணித்துள்ளதாக தெரிகின்றதெனவும் கூறியுள்ளார்.

அதன்படி, புதிய அரசாங்கத்துடன் ஒற்றுமையாக செயற்படுவதற்கு அமெரிக்கா எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதனையடுத்து அவருடைய கேள்விகளுக்குப் பதிலளித்த பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ கொவிட் - 19 வைரஸ் பரவல் காரணமாகக் பின்னடைவைச் சந்தித்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் கொவிட்-19 பரவலை அரசாங்கம் கட்டுப்படுத்தியமை பெரும் சாதனையெனக் கூறிய தூதுவர் எலெய்னா டெப்லிஸ், இலங்கைக்குள் தனியார் துறை தொழில்வாய்ப்புகளைப் பலப்படுத்துவதற்கு அமெரிக்கா கைகொடுக்கும் எனவும் உறுதியளித்துள்ளார்.

பல்கலைக்கழக பகடிவதை;

# ‘சட்ட உருவாக்கத்தில் தளர்வுக்கு இடமில்லை’

பகடிவதைக்கு எதிராக சட்டங்களை உருவாக்கும்போது எவ்விதத் தளர்வு நிலையும் இன்றி உருவாக்க வேண்டியது அவசியமென்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் தலைமையில், பல்கலைக்கழக ஆணைக்குழு, உயர்கல்வி அமைச்சின் அதிகாரிகளோடும் பல்கலைக்கழக உபவேந்தர்கள், தேசிய கல்வியற் கல்லூரிகளின் அதிபர்கள் ஆகியோருடனும் தனித்தனியே நடத்தப்பட்ட கூட்டங்களின் போதே, அமைச்சர் மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார்.



பல்கலைக்கழக உபவேந்தர்களுடனான சந்திப்பில், பல்கலைக்கழங்களை மீளத் திறப்பது தொடர்பாகவும், சுகாதார செயன்முறைகளைப் பின்பற்றி நடப்பதுத் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற உபவேந்தர்களுடனான கூட்டத்தின் போது, பகடிவதை தொடர்பாக சட்ட வரைவுகளைத் தயாரிக்கும்போது எவ்விதத் தளர்வுத் தன்மைகளும் இன்றி தயாரிப்பதன் அவசியத்தையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், கல்வியற் கல்லூரிகளின் அதிபர்களுடனான சந்திப்பின் போது, உலக நடைமுறைக்குப் பொருத்தமான வகையில் கல்வித்திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்தும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ‘கொரியாவிலிருக்கும் இலங்கையர்கள் இரு மாதங்களுக்குள் அழைத்துவரப்படுவர்’

கொரிய நாட்டுக்குத் தொழில் நிமித்தம் சென்று, அவர்களுக்கான சேவை ஒப்பந்தக் காலம் முடிந்தும் நாடு திரும்ப முடியாமல் அங்கு சிக்கிக்கொண்டுள்ள இலங்கையர்கள் 1,600 பேரையும் இரு மாதங்களுக்குள் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படுமென தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.



கொவிட் - 19 பரவல் காரணமாக நாடுகளுக்கிடையிலான விமான சேவைகள் முடங்கியதால் மேற்படி இலங்கையர்கள் கொரிய நாட்டில் பல மாதங்களாகத் தங்கியிருக்கும் நிலை காணப்படுவதாகவும், மேற்படி தரப்பினரை மீள அழைத்து வரும்வரை, அடுத்த கட்டமாக கொரியாவுக்குத் தொழிலுக்காக செல்லவுள்ள இலங்கையர்களை அனுப்ப முடியாத நிலைமை காணப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதனால் மேற்படி இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வந்த பின்னர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பயிற்சி நிலையத்தில் அவர்களைத் தனிமைப்படுத்த உள்ளதாகவும், அவர்களுக்கான உணவு உள்ளிட்ட ஏனைய வசதிகளைச் செய்துகொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றார்.

அதற்கமைய கொரியாவில் தங்கியிருக்கும் இலங்கையர்களை ஸ்ரீ லங்கன் விமான சேவையின் மூலம் இரு மாதங்களுக்குள் நாட்டுக்கு அழைத்து வரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கான கொரியாவின் மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தில் நேற்று (18) இலங்கைக்கான கொரியாவின் வதிவிடப் பிரதிநிதியான கிம் வொன் சியோக் உடனான சந்திப்பிலேயே அமைச்சர் மேற்படி விடயங்களைச் சுட்டிக்காட்டி இருந்தார்.

இந்த சந்திப்பின் போது, இலங்கையிலிருந்து கொரியாவுக்கு தொழில் நிமித்தம் செல்வோரை பயிற்றுவிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை என்பதால், கொரிய தொழில்வாய்ப்புகளுக்காக புதிய பயிற்றுவிப்பு நிலையமொன்றை ஹோமாகமவில் நிறுவுவதற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்திருந்த நிலையில் அதற்கான தொழில்நுட்ப வசதிகளைச் செய்து தருவதாக கிம் வொன் சியோக் அமைச்சரிடம் உறுதியளித்தார்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான

# தேசிய கொள்கை வகுக்கும் பணிகள் ஆரம்பம்

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய கொள்கை ஒன்றை வகுப்பதற்கு வாய்ப்பளிக்குமாறு, அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் முன்வைத்தக் கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள தொழில் வல்லுநர்களின் தேசிய முன்னணி, அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளனவெனவும் தெரிவித்துள்ளது.



முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரிடத்தில் இந்தக் கோரிக்கையை பலமுறை முன்வைத்திருந்த போதும், அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ள அந்த அமைப்பின் செயலாளர் கபில ரேணுக பெரேரா, மேற்படி இருவரும் நாட்டுக்கு பொருத்தமற்றதொரு பொருளாதாரக் கொள்கைளை நடைமுறைப்படுத்தினர் எனவும் சாடினார்.

அத்தோடு, வரலாற்றில் இலங்கை மிகப் பலமான பொருளாதாரத்துக்கு உரிமைக் கோரியிருந்த போதும், இன்று அந்த நிலைமை தலைகீழாக மாறியுள்ளமை கவலைக்குரியதெனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தேசிய பொருளாதாரக் கொள்கை ஒன்று இல்லாமையே இதற்கான பிரதான காரணமெனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கான தேசிய கொள்கையை வகுப்பதற்கான அனுமதியைப் பெற்றுத்தருவதாக அமைச்சர் பந்துல குணவர்தன உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவித்தார்.



# 305 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

உலகளவில் ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 305 இலங்கை பிரஜைகள், நேற்று (18) நாடு திரும்பியுள்ளனர்.

கட்டாரில் வர்த்தகக் கப்பல் ஒன்றில் பணி புரிந்த 20 இலங்கையர்களும், ஜோர்தானின் அம்மானில் இருந்தவர்களுமே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர். நாடு திரும்பிய அனைவரும் பிசிஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு, தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# ‘நாட்டின் மருந்துத் தேவை பூர்த்தி செய்யப்படும்’

அடுத்த ஐந்து வருடங்களுக்குள் நாட்டின் மருந்துத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு உற்பத்தியை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக பொருளாதார மறுமலர்ச்சி, வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவர் பசில் ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுகாதாரத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நேற்று (18) நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



உள்ளூர் மருந்துத் தேவையில் 85 வீதத்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் ஏற்கனவே பெரும் செலவுகளைச் செய்து வருவதாக இதன்போது கூறிய பசில் ராஜபக்‌ஷ, தனியார் முதலீட்டார்களைக் கொண்டு, உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஏற்றுமதி திறனைக் கொண்ட

அமைச்சராக பதவியேற்ற

# நாமலுக்கு பிரதமர் மஹிந்த வாழ்த்து

விளையாட்டுதுறை அமைச்சின் கடமைகளை நேற்று (18) சுபநேரத்தில் பொறுப்பேற்றுக்கொண்ட அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தமது ஆசிகளையும் பராட்டுகளையும் தெரிவித்துக்கொண்டார்.

விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சில் இடம்பெற்ற மத அனுட்டானங்களின் பின்னர், அந்த அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட நாமல் ராஜபக்‌ஷவுக்கு, நாராஹேன்பிட்ட அபயாராம விகாரையின் விகாராதிபதி முரத்தெட்டுவே ஆனந்த தேரர் உள்ளிட்ட பலரும் ஆசிகளை வழங்கினர்.

இதன்போது, அமைச்சரின் பாரியார் நிமினி ராஜபக்‌ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, அவருடைய பாரியார் ஷிராந்தி ராஜபக்‌ஷ, சகோதரர்களான யோசித, ரோஹித ராஜபக்‌ஷ ஆகியோரும் கலந்துகொண்டிருந்ததுடன், அமைச்சர்களான டக்லஸ் தேவானந்தா, ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ ஆகியோரும் கலந்துகொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.





தேசிய இளைஞர் சேவை மன்றத்தில்

# இராஜ், இமாராவுக்கு தலைமைப் பதவி

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவராக பாடகர் இராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.





விளையாட்டுத்துறை, இளைஞர் அலுவல்கள் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷவால், பாடகர் இராஜ் மேற்படி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம் இலங்கையின் பிரபல பாடகியான தெஹானி இமாறாவும் அந்தச் சபையின் மற்றுமொரு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் குறித்த பதவிகளில் 3 வருடங்களுக்கு அல்லது மீள அறிவிக்கும் படி நிலைக்கலாம் என்றும் விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி மேற்படி இருவரும் குறித்த மன்றத்தின் கடமைகளைச் சரிவரச் செய்வர் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதெனவும் அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

தீர்வு இல்லை என்றால்

# மீண்டும் போராடுவோம்

## வேலையற்ற பட்டதாரிகள் எச்சரிக்கை



தற்போது வெளியிடப்பட்டுள்ள அரச தொழிலில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் பெயர் விவரங்களில், சுமார் 49 ஆயிரத்துக்கும் அதிகமான வேலையற்றபட்டதாரிகளின் பெயர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அப்பட்டதாரிகள், கொழும்பில் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக, நேற்று (18) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்கம் தொழில் வாய்ப்புகளை வழங்க வேண்டுமென வலியுறுத்தி வேலையற்ற பட்டதாரிகள் தொடர்ந்து, போராடி வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது அரச நியமனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளோரின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன. இதில் 49 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகளின் பெயர் விவரங்கள் இல்லை என தெரிவித்துள்ள வேலையற்ற பட்டதாரிகள், அரச நியமனங்கள் கிடைக்கும் வரையில் தொழில் வாய்ப்புக்களை செய்து வந்ததைக் காரணங்காட்டியே இவ்வாறு தங்களது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

உறுதியளிக்கபட்டவாறு இரு வாரங்களில் தங்களுக்கு தீர்வு வேண்டுமெனவும் கோரினர்.

முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர்

# மஹிந்த விஜேசிறி காருக்குள் மரணம்

முன்னாள் பரீட்சைகள் ஆணையாளரான மஹிந்த விஜேசிறியின் சடலம், ஹொரன - கெஸ்பேவ பகுதியில் காரொன்றுக்குள் இருந்து, நேற்று (18) மீட்கப்பட்டுள்ளது.



கஹாதுடுவ பகுதியிலிருந்து நுகேகொடை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த போதே, அவர் தனது வாகனத்துக்குள் உயிரிழந்துள்ளாரென தெரியவந்துள்ளது.

அவர் 2000 - 2004 வரையான காலப்பகுதியில் பரீட்சைகள் ஆணையாளராக பணியாற்றியுள்ளார்.

# ‘கொவிட் பரவல் இளைஞர்கள் மத்தியில் உக்கிரமடைந்துள்ளது’

இளைஞர்கள் மத்தியில் கொவிட் - 19 வைரஸ் பரவல் உக்கிரமடையும் நிலைமை தோன்றியிருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

அந்த ஸ்தாபனத்தின் மேற்கு பசுபிக் வலயத்தின் பணிப்பாளர் டெகொஷி கசாயி 20 - 40 இடைப்பட்ட வயதுடையவர்கள் மத்தியில் கொவிட் - 19 வைரஸ் உக்கிரமாகப் பரவும் நிலைமை காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த வயதுக்கிடைப்பட்டவர்கள் தொற்றுக்கு ஆளாகியுள்ள போதும், அவர்கள் தாம் நோயாளிகள் என்பதை அறிந்துகொள்ளாமலேயே உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, சனத்தொகை அதிகரித்து காணப்படுகின்ற பகுதிகளிலும், வறுமையான பகுதிகளிலும் வசிப்பவர்களிடையே மேற்படி வைரஸ் தொற்று வேகமாக பரவி வருகின்றதெனவும் தெரிவித்தார்.


பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளின் கீழ் கீழ்க்கானும் கம்பனியின் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

கம்பனியின் பெயர்: தருபதி டிரேடிங் (பிரைவட்) லிமிட்டட்

பதிவு செய்த அலுவலகம்:

இல. 7, டெம்பல் வீதி, கடுவாகொட, மாத்தறை.

பதிவு செய்த இல: P V - 00213701

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 18 ஜூலை 2019

கம்பனி செயலாளர்



பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளின் கீழ் கீழ்க்கானும் கம்பனியின் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

சேபஸ்கேன் செக்யூரிட்டி சொலுஷன்ஸ் (பீவீடீ) எல்டீடி
P V - 00220060
இல. 65, விஜய குமாரதுங்க மாவத்தை, பொல்லஹேன்கொட, கொழும்பு - 05. சிறீ லங்கா.

விஷ் ஹொஸ்பிட்டல் என்ட் ரிசேர்ச் சென்டர் (பிரைவட்) லிட்டட்
P V - 00225577
இல. 393/6, கசகாஹாவத்தை வீதி, உடாமுல்ல, நுகேகொடை.

மதூஷி பேக்கேஜிங் (பிரைவட்) லிட்டட்
P V - 00225544
இல. 89, பராக்கிரம மாவத்தை, பேலியகொடை.

குளோபல் செர்ஃப்லைன் (பிரைவட்) லிட்டட்
P V - 00225191
இல. 176/12, 3 வது ஒழுங்கை, பிரதான வீதி, வெலிகம.

லங்கா ஹிமாலயன் யோகா நிகேத்தன் (பீவீடீ) எல்டீடி
P V - 00223752
“சிறீயோகி” இல. 171, எசீடும, குளியாபிடிய.

ஏ பி எப் புரூட் கார்டன் (பிரைவட்) லிட்டட்
P V - 00223287
இல. 150, சோன் 1, மிலேனியம் சிட்டி, ஜா-ஹெல.

கம்பனி செயலாளர்கள்

பொலிஸ் நிலையங்களுக்குள் நெருக்கடி

# அறிக்கையைக் கோருகிறது ஆணைக்குழு

நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் பணியாற்றுகின்ற ஊழியர்கள் தொடர்பான அறிக்கையொன்றைக் கையளிக்குமாறு, பதில் பொலிஸ்மா அதிபரிடத்தில், தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிக்கையொன்றைக் கோரியுள்ளது.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பணியாற்றுகின்ற, பணியாற்றுவதற்கு அவசியமான ஊழியர்களின் தொகை தொடர்பாகவே பொலிஸ் ஆணைக்குழு தகவல்களைக் கோரியுள்ளதாகக் கூறப்படுகிறது.

நாடு முழுவதிலும் 489 பொலிஸ் நிலையங்கள் காணப்படுவதுடன், அவற்றில் சில பொலிஸ் நிலையங்களுக்குள் தேவைக்கு அதிகமாக ஊழியர்கள் இருக்கின்ற போது, இன்னும் சில பொலிஸ் நிலையங்களில் போதியளவு ஊழியர்கள் இல்லையெனவும் கூறப்படுகிறது.

மேற்படி பொலிஸ் நிலையங்களில் அதிகமான ஊழியர்கள் இருக்கின்ற போதும், அவர்களுக்கு உரிய பணிகள் கையளிக்கப்பட்டுள்ளனவெனவும், அவர்களில் சிலர் தமது சொந்த இடங்களில் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதனால் சில பொலிஸ் நிலையங்களில் வழமையான பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளதாகவும், அதனை கருத்தில்கொண்டே தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிக்கையொன்றைக் கோரியுள்ளதெனவும் கூறப்படுகிறது.

இதன்படி இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணிகளை, பதில் பொலிஸ்மா அதிபரால், சப்ரகமுவ மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் எல்.எஸ்.பதிநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.



## நன்றி நவிலல்...

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில், முஸ்லிம் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு, புத்தளம், எழுவன்குளத்தில் நடைபெற்றது. இதன்போது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியூதீன், நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

(படம் – எம்.யூ.எம். சனூன்)

# கொட்டடியில் அகழ்வுப் பணி

■ எம். றொசாந்த், என். ராஜ், எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம் - கொட்டடிப் பகுதியில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மனித எச்சங்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, நீதிமன்றத்தின் அனுமதியுடன், அப்பகுதியில், நேற்று (18) அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி, யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எஸ். பீற்றர் போல் முன்னிலையில், அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, பெண் ஒருவருடையது என்று நம்பப்படும் மனித எச்சங்கள், பற்பசை பக்கட், பல் விளக்கும் பிறஸ், சீப்பு, பவுடர் பேணி, 3 மேற்சட்டைகள், பாவடை ஒன்று உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன.

அவற்றை வைத்து ஒப்பிடும் போது, பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு இந்த இடத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

எனினும், நிபுணத்துவ ஆய்வு ஊடாகவே, மனித எச்சங்கள் எந்தக் காலப்பகுதிக்குரியவை என உறுதிப்படுத்தப்பட்டு, விசாரணைகளை முன்னெடுக்க முடியுமென, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிபுணத்துவ சட்ட மருத்துவ அதிகாரி உ. மயூரதன், கடமை விடுப்பில் உள்ளதால், அவரது முன்னிலையில் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க உத்தரவிட்ட பதில் நீதவான், பணிகளை இன்று (19) வரை ஒத்திவைத்தார்.

இதேவேளை, இது தொடர்பில் செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

போக்குவரத்துத்துறையை

# மேம்படுத்துவதற்கு ஆலோசனை

எதிர்வரும் ஐந்து வருடங்களில், போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்கு குறுகிய கால மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முதற் கட்டமாக பயணிகளுக்கு சிறந்த மன நிலையுடன் பஸ் வண்டியில் அல்லது புகையிரதத்தில் பயணம் செய்வதற்கான சூழலை ஏற்படுத்தி போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் பணியை ஆரம்பிக்குமாறும் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.



பஸ் வண்டிகளைக் கழுவி சுத்தம் செய்து பயணிகள் பயணிப்பதற்கான ஒழுங்குகளை, நாளைய தினமே ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

போக்குவரத்து அமைச்சு மற்றும் வாகனங்களை ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்துச் சேவைகள், புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டம் குறித்து, நேற்று(18) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

மோட்டார் கார்களில் வந்து அதனை நிறுத்திவிட்டு பஸ் வண்டிகளில் பணி இடங்களுக்குச் செல்லும் முறைமையை (Park & drive) விரைவாக நடைமுறைப்படுத்தி, வீதி நெரிசலை தீர்க்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்துடன் போக்குவரத்து சபை, பஸ் போக்குவரத்து சேவையை ஒரு சேவையாக நடத்திச் சென்றாலும் நட்டம் அடையாத நிறுவனமாக இருக்க வேண்டுமெனவும் கிராமங்களில் போக்குவரத்து தொடர்பாக கவனம் செலுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

# உணவுப் பொதிகளுடன் பணமும் கொள்ளை

## சந்தேக நபர்கள் சிக்கினர்

காலி நகருக்குள் உணவுப் பொதிகள் தொடர்பாக முற்பதிவுகளை மேற்கொள்ளும் நபரொருவரை அச்சுறுத்தி, அவர் வசமிருந்த உணவுப் பொதிகளையும் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றதாக சந்தேகிக்கபடும் இருவரை, அக்மீமன பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்தோடு, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரைக் கைது செய்வதற்கான ஆரம்பக்கட்ட விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர்களால் படதுவ பிரதேசத்துக்கு உணவுப் பொதிகளைக் கொண்டு வந்து தருமாறு முற்பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும்

> **“இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரைக் கைது செய்வதற்கான ஆரம்பக்கட்ட விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்**

அதன்படி உணவுப் பொதிகளுடன் குறிப்பிட்ட இடத்துக்கு வந்த உணவகத்தின் ஊழியரை அச்சுறுத்தி, அவரிடமிருந்த 27 ஆயிரத்துக்கும் அதிகமான பணத்தையும் 13 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகளையும் சந்தேகநபர்கள் பறித்துச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள இருவரையும் இன்று (19) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவின்

# அதிகாரிகளின் விளக்கமறியல் நீடிப்பு

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் 13 பேருக்கு விதிக்கப்பட்டிருந்த விளக்கமறியல், இம்மாதம் 31ஆம் திகதி வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தங்களால் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களை மீண்டும் அவர்களுக்கே விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு விசாரணை, கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று (18) எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

எவ்வாறாயினும், கொரோனா வைரஸ் பரவலைக் கருத்திற்கொண்டு, மேற்படி வழக்கு விசாரணைகளில் சந்தேகநபர்கள் ஆஜர்படுத்தப்பட்டு இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிள்ளையானுக்கு பிறந்த நாள்

# நடுவீதியில் கேக் வெட்டிக் கொண்டாட்டம்

■ எம்.எம். அஹமட் அனாம்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) 45ஆவது பிறந்த நாள், வாழைச்சேனை, பேத்தாழையில் நேற்று (18) கொண்டாடப்பட்டது.

கட்சியின் பிரதி தலைவர் நா.திரவியம் தலைமையில், பேத்தாழை பிரதான வீதியில் கேக் வெட்டி, பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

இதன்போது, சிவநேசதுரை சந்திரகாந்தனின் தயாரான திருமதி கே.சிவநேசதுரை, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



# ‘இரண்டிலும் கையை வைப்பது ஆபத்து’

## அனுமதியோம் என்கிறார் ஜனா

■ சகா

“13ஆவது, 19ஆவது அரசமைப்புத் திருத்தங்களை ஒழிப்பதற்கு இந்த அரசாங்கம் முற்படுமாயின், அது சிறுபான்மை மக்களின் மீது கை வைப்பதற்குச் சமமாகும். அதற்கு ஒருபோதும் அனுமதியோம்” என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

“நாட்டின் அரசமைப்புத் திருத்தங்களில் சிறுபான்மையினரின் நலனுக்காக கொண்டுவரப்பட்டதே 13ஆவது திருத்தம். அத்துடன், மக்களின் உரிமைச் சுதந்திரங்கள் பேணப்படுவதற்கு வசதியாக 19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது” எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று (18) ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில், “உண்மையில் 13ஆம், 19ஆம் திருத்தங்களை மீண்டும் திருத்துவதோ, நீக்குவதோ அவசியமற்றதொன்று.

“நாட்டில் எப்போது பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதோ அன்று தொடக்கம் பிரச்சினை ஆரம்பமானது. நாட்டில் இன்று வரைக்குமான இனப்பிரச்சினைக்குக் காரணமே அதுதான். அது நடைமுறைக்கு வந்திருந்தால் பிரச்சினையே இல்லை. அதேபோன்றதொரு நிலை உருவாக்க இந்நீக்கம் வழிகோலும். எனவே அதற்கு இடமளிக்க முடியாது.

“தமிழ் மக்களின் தொடர் போராட்டத்தை மய்யமாக வைத்து, இந்திய அரசாங்கத்தின் தலையீட்டில் மாகாண சபை முறைமை வந்தது. 13ஆவது திருத்தத்துக்கு மேலும் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கி வலுப்படுத்துவதை விட்டுவிட்டு, அதை நீக்குவதென்பது நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும்.

“வடக்குக்கு மட்டும் காணி, பொலிஸ் அதிகாரத்தை வழங்கமுடியாதென்று அமைச்சர் கூறுவது சர்வாதிகாரம். அதற்கெதிராக நாம் வலுவாகப் பேராடுவோம்” என்றார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள்

# ‘ஔடத ஏற்றுமதித் துறையில் நாடு முன்னணியில் திகழும்’

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் நாட்டின் ஔடத தேவையைப் பூர்த்தி செய்வதுடன், ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு, உற்பத்தியை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக, பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுகாதாரத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச அதிகாரிகளுடன், அலரி மாளிகையில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற சந்திப்பின்போதே, பசில் ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

உள்ளூர் ஔடத தேவையில் 85 சதவீதத்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் ஏற்கெனவே பெரும் செலவுகளைச் செய்து வருவதாகச் சுட்டிக்காட்டிய பசில் ராஜபக்ஷ, உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஏற்றுமதி திறனைக் கொண்ட தொழிற்சாலைகளைத் தனியார் முதலீட்டாளர்களைக் கொண்டு நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

ஜனாதிபதியின் ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கை திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு ஒரு மகத்தான ஆணையை வழங்கியுள்ள மக்கள், சுகாதாரத் துறையில் ஒரு தெளிவான மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள்.இந்த மாற்றத்தை ஏற்படுத்த சுகாதார துறையுடன் தொடர்புடைய நிறுவனங்கள், ஏற்றுமதித் துறை தொடர்பான நிறுவனங்களின் உதவியை நாடுவதாகவும் ஆடை ஏற்றுமதித் துறையில் முன்னணியில் திகழ்ந்த இலங்கை, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஔடத ஏற்றுமதித் துறையில் முன்னணியில் திகழ்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன எனவும் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# தேரரை தேடி வேட்டை

கண்டி அஸ்கிரிய மகா விஹாரையின் வளாகத்திலுள்ள பண்டைய மதிப்புமிக்க, பழங்காலக் கட்டடமொன்றுக்குச் சேதத்தை விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், எங்கள் மக்கள் சக்தி கட்சியின் செயலாளர் எனக் கூறப்படும் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சுமார் 700 வருடங்கள் பழைமை வாய்ந்த அந்தக் கட்டடத்துக்கு, மேற்படி தேரர் சேதம் விளைவித்துள்ளார் என, விஹாரையின் விகாராதிபதி கலங்குட்டியின் ராகுலா தேரர், கண்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே, மேற்படி விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றனவென கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த முறைப்பாட்டுக்கு அமைய, சேதமாக்கப்பட்டதாகக் கூறப்படும் அந்தப் பழைமை வாய்ந்த கட்டடத்தின் பண்டைய மதிப்புத் தொடர்பில், தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அறிக்கையொன்றையும் பொலிஸார் பெற்றுக்கொண்டுள்ளனர். இந்நிலையில், தலைமறைவாகியிருக்கும் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கைது செய்வதற்கு, பொலிஸ் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவென, மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

# ஹெரோய்னுக்கு அடிமை; 13 பேர் கைது

■ முஹம்மது முஸப்பிர்

மாதம்பை, தம்பகல்லவத்தை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபட்ட இருவரைக் கைது செய்த மாதம்பை பொலிஸார், ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையான 11 பேரையும் கைது செய்தாகவும் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து ஐந்து கிராமும் 380 மில்லி கிராமும் எடையுடைய ஹெரோய்னை கைப்பற்றியுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 20 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் இவர்களில் இருவர் ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபடுவர்கள் என்றும், அவர்களில் ஒருவரிடமிருந்து 2,160 மில்லி கிராம் ஹெரோய்னையும் மற்றையவரிடமிருந்து 2,320 மில்லி கிராம் ஹெரோய்னையும் கைப்பற்றியுள்ளதாகவும், தம்பகல்ல அண்மித்த



பிரதேசங்களில் விற்பனை செய்து வந்துள்ளமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

AUGUST 19, 2020
WEDNESDAY
VOL: 006/076
RS. 10.00
UPCOUNTRY ★★

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror



தனியார் துறையின் பங்களிப்புடன்

## மத்திய மாகாணத்தில் 10 பாற்பண்ணைகள் அபிவிருத்தி

ஐந்து ஆண்டுகளுக்குள் இந்நாட்டின் பால் உற்பத்தியை, நாட்டின் பால் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ள பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, தனியார் துறையின் பங்களிப்புடன் கண்டி, நுவரெலியா, மாத்தளை மாவட்டங்களில் 10 பாரியளவிலான பாற்பண்ணைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பால் உற்பத்தித்துறையுடன் தொடர்புடைய அமைச்சர்கள் உள்ளிட்ட அத்துறைசார்ந்த அரச நிறுவன தலைவர்களுடன் அலரி மாளிகையில், நேற்று (17) நடைபெற்ற சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்து, ஜனாதிபதி செயலணி கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதுடன், அதன்படி உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் பாரியளவிலான பால் பண்ணைகள் மற்றும் சிறிய அளவிலான பாற்பண்ணைகளை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூர் பால் தேவை 1,200 மில்லியன் லீற்றராகும். தற்போது உற்பத்தி செய்யப்படும் பாலின் அளவு 420 மில்லியன் லீற்றராகும். எஞ்சிய தேவையான பாலின் அளவு 780 மில்லியன் லீற்றர் என்ற

தொடர்ச்சி P2







அமரர் தொண்டமானின்

# பூர்வீக இல்லத்தில் தீ

■ மலையக நிருபர்கள்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்குச் சொந்தமான கொத்மலை வேவண்டனில் உள்ள பூர்வீக இல்லத்தில், நேற்று (18) அதிகாலை 2.30 மணியளவில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பௌத்த தேரரை தேடி வேட்டை



கண்டி அஸ்கிரிய மகா விஹாரையின் வளாகத்திலுள்ள பண்டைய மதிப்புமிக்க, பழங்காலக் கட்டடமொன்றுக்கு சேதத்தை விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், எங்கள் மக்கள்

தொடர்ச்சி P2

மலையகத்திலிருந்து

## எட்டு உதவி விரிவுரையாளர்கள் யாழ்.பல்கலைக்குத் தெரிவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் 37ஆம் வருட மாணவர்களில், மலையகத்தைச் சேர்ந்த 22 சிறப்புக் கலைமாணி மாணவர்களில் 8 மாணவர்கள், உதவி விரிவுரையாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முதன்முறையாக 8 மலையக மாணவர்கள் விரிவுரையாளர்களாகத் தெரிவு செய்யப்படுவது இதுவே முதற்றடவையாகும்.

அழகுராஜா என்பவர் சமூகவியல் பாடத்துக்கும் பவித்ரா அரசறியவில்

தொடர்ச்சி P2



வெலிகபொல பொலிஸ் நிலையத்தின்

## விடுதியில் தீ

■ க. மஹிந்தகுமார்

பலாங்கொடை, வெலிகபொல பொலிஸ் நிலையத்தின் விடுதியில், நேற்று முன்தினம் (17) இரவு 9.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீப்பரவல் காரணமாக, விடுதி முற்றாகச் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (17) இரவு 9.30 மணி அளவில் தீ பரவியுள்ளது. தீ விபத்து இடம்பெறும்போது விடுதியில் அதிகாரிகள் இருந்துள்ளனர் என்றும் எனினும் அவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் பொலிஸாரின் உடமைகள் அனைத்தும்

தொடர்ச்சி P2



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் எம்.பிகளுக்கு


## ஹட்டனில் வரவேற்பு

நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் 6 உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு, ஹட்டனில் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது. தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சார்பில் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன்,

தொடர்ச்சி P2


சபைத் தலைவர் தினேஷ்;

## முதற்கோலாசான் ஜோன்ஸ்டன்



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் புதிய சபைத் தலைவராக அமைச்சர் தினேஷ் குணவர்தனவும் அரசாங்க முதற்கோலாசானாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவும்

தொடர்ச்சி P2



## நுரைச்சோலை செயலிழந்தது

நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையம் மீண்டும் செயலிழந்துவிட்டது.

நேற்றுமுன்தினம் திடீரென ஏற்பட்ட மின் தடை காரணமாகச் செயலிழந்திருந்த மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள், வழமைக்குத் திரும்பி இருக்கவில்லையெனத் தெரிவித்த இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் சுலக்‌ஷன ஜயவர்தன, எவ்வாறாயினும், இந்த மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் வழமைக்குத் திருப்புவதற்கு இன்னும் நான்கு நாள்கள் ஆகும் என்றார்.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்குள் காணப்படும் தானியங்கி குளிர்மையாக்கல் இயந்திரத்தின் செயற்பாடுகள், திடீரென ஏற்பட்ட மின் தடை

தொடர்ச்சி P2

மின்சாரம் தடைபட்டது ஏன்?

## 7 நாள்களுக்குள் அறிக்கை

முழுநாட்டையும் பகலிலேயே இருட்டாக்கி தடைபட்டிருந்த மின்சாரம், நேற்று முன்தினம் இரவே, வழமைக்குத் திரும்பிவிட்டதெனத் தெரிவித்த மின்சக்தி அமைச்சு, மின் விநியோகம் தடைப்பட்டமை தொடர்பிலான விசாரணைகளுக்காக, 9 பேர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது. அக்குழு, 7 நாள்களுக்குள் அறிக்கையிடும்.

பேராசிரியர் ராஹூல அதலகேயின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள

தொடர்ச்சி P2

நான்கு நாள்களுக்கு

## ஒரு மணிநேரம் மின் துண்டிப்பு

நாடளாவிய ரீதியில், நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலம் மின்சாரம் துண்டிக்கப்படுமென அறிவித்துள்ள இலங்கை மின்சார சபை, இந்த மின்துண்டிப்பு நான்கு நாள்களுக்கு மட்டுமே அமல்படுத்தப்படுமென அறிவித்தல் விடுத்துள்ளது.

நேற்று (18) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த மின்துண்டிப்பு, நாடளாவிய ரீதியில் நான்கு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு, நான்கு சந்தர்ப்பங்களில் அமல்படுத்தப்படுமென இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் கீர்த்தி கருணாரத்ன தெரிவித்தார்.

அதனடிப்படையில், மாலை 6 மணிமுதல் இரவு 7 மணிவரை, இரவு 7 மணி

தொடர்ச்சி P2

சிங்கராஜா வன விவகாரம்:

## வீதி அபிவிருத்தியை நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு

சிங்கராஜா வனம் மற்றும் உலக பாரம்பரிய தளத்துக்கு அண்மித்ததாக முன்னெடுக்கப்படும் வீதி அபிவிருத்தித் திட்டங்களைத் தற்காலிகமாக நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குப் பணித்துள்ளார்.

சிங்கராஜா வனத்தின் நடுவே, வீதியொன்று அமைக்கப்பட்டு வருவதால், சிங்கராஜா வனத்துக்கும் அதனை அண்மித்த பாரம்பரிய தளங்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருவதாக, பொதுமக்களும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகளும் முறையிட்டு வருகின்றன. இந்த வனத்தின் இயற்கைத் தன்மையை அழிக்கும் வகையில், வீதி அமைக்கப்பட்டு வருவதாகவும்

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்



# மத்திய மாகாணத்தில் 10 பாற்பண்ணைகள் அபிவிருத்தி

போதிலும் திரவப் பால் பயன்பாட்டுக்கு மக்களை பழக்கப்படுத்தினால், மேலும் 400 மில்லியன் லீற்றர் பாலை கொண்டு உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1 கிலோகிராம் பால் மாவை உற்பத்தி செய்வதற்கு சுமார் 8 லீற்றர் திரவ பால் தேவைப்படுவதாகவும் அதன்படி, 1 கிலோகிராம் பால் மாவிலிருந்து தயாரிக்கக்கூடிய பால் கோப்பைகளின் அளவை விட 8 லீற்றர் திரவ பாலில் இருந்து தயாரிக்கக்கூடிய பால் கோப்பைகளின் அளவு மிக அதிகம் என்றும் இதன்போது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பால் விலை, பசுக்களை இறக்குமதி செய்தல், புல்வெளிகளைப் பாதுகாத்தல், மக்காச்சோளம் சாகுபடி செய்தல், அதற்கான நிலம் ஒதுக்கீடு செய்தல், மக்காச்சோளம் சாகுபடியின் வெற்றிக்கு பயனுள்ள விதைகளை இறக்குமதி செய்து உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மக்காச்சோளத்தின் உற்பத்தித்திறனை ஒரு ஹெக்டேயருக்கு 3.8 மெட்ரிக் தொன்னிலிருந்து 7 மெட்ரிக் தொன் வரை உயர்த்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் பருவத்தில் பால் பண்ணையாளர்களுக்கு அவசியமான மக்காச்சோளம் பயிரிடத் தேவையான நிலங்களை விடுவிப்பது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என, ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட துறையினருக்கு ஆலோசனை வழங்கினார்.



# அமரர் தொண்டமானின் பூர்வீக இல்லத்தில் தீ

நுவரெலியா மாநகர சபை, ஹட்டன்- டிக்கோயா நகர சபை ஆகியவற்றின் தீயணைப்பு படைப்பிரிவுக்குச் சொந்தமான தீயணைப்பு இயந்திரங்கள் அடங்கிய வாகனங்களைக் கொண்டு, தீப்பரவலை வியாபிக்கவிடாது, முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எனினும், அந்த வீட்டின் கூரை தீக்கிரையாகி முழுமையாக சேதமடைந்துவிட்டது என கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தை கேள்வியுற்றதும், அமரர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வரான இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனத் தெரிவித்த கொத்மலை பொலிஸார், சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருவதாகத் தெரிவித்தனர்.

தீப்பரவலால், அந்த பூர்வீக இல்லத்திலிருந்த சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பிலான விவரம் இன்னும் மதிப்பிடப்படவில்லை.

# பௌத்த தேரரை...

சக்தி கட்சியின் செயலாளர் எனக் கூறப்படும் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

சுமார் 700 வருடங்கள் பழைமை வாய்ந்த அந்தக் கட்டடத்துக்கு, மேற்படி தேரர் சேதம் விளைவித்துள்ளார் என, விஹாரையின் விகாராதிபதி கலங்குட்டியின் ராகுல தேரர், செய்த முறைப்பாட்டுக்கு அமையவே, மேற்படி விசாரணைகள் முன்னெடுக்க ப்படுகின்றனவென கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

சேதமாக்கப்பட்டதாகக் கூறப்படும் பழைமை வாய்ந்த கட்டடத்தின் பண்டைய மதிப்பு தொடர்பில், தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அறிக்கையொன்றையும் பொலிஸார் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், தலைமறைவாகியிருக்கும் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கைது செய்வதற்கு பொலிஸ் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவென, மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

# எட்டு உதவி...

பாடத்துக்கும், கனகேஷ்வரி தமிழ் பாடத்துக்கும், லோஷினி புவியியல் பாடத்துக்கும், பிரியநதி மொழிபெயர்ப்புக் கற்கைகளுக்கும், ஜெனோவா உளவியல் பாடத்துக்கும், துலாபரணி ஊடகவியல் பாடத்துக்கும், சக்தி சிவா புவியியல் பாடத்துக்கும் உதவி விரிவுரையாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# முதற்கோலாசான்...

நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்திலும், மேற்குறித்த இருவருக்கே இந்தப் பதவிகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்தில் புதிய பதவிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ ஆகியோருக்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

# ஹட்டனில் வரவேற்பு

வேலுகுமார், அரவிந்தகுமார் ஆகியோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் அவர்களை வரவேற்கும் நிகழ்வு, ஹட்டனில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பு, நுவரெலியா, பதுளை, கண்டி ஆகிய மாவட்டங்களில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினர்கள் வெற்றிபெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், இராதாகிருஷ்ணன், எம்.பிக்களான வேலுகுமார், அரவிந்தகுமார், உதயகுமார் ஆகியோருக்கே இவ்வாறு வரவேற்பளிக்கப்படவுள்ளது.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்து தொலைபேசி சின்னத்தின்கீழ் போட்டியிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணி நுவரெலியா, கண்டி, பதுளை, கொழும்பு மாவட்டங்களில் வெற்றிபெற்றது. இரத்தினபுரி, கேகாலை, கம்பஹா மாவட்டங்களில் போட்டியிட்ட கூட்டணியின் வேட்பாளர்கள் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளைப்பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# விடுதியில் தீ

தீக்கிரையாகியுள்ளதுடன் சொத்துகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது..

பிரதேச மக்கள், பொலிஸ் அதிகாரிகள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு முயற்சித்த போதிலும் முயற்சி பலனிக்காததால் பலாங்கொடை நகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் வரவழைக்கப்பட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீவிபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# நுரைச்சோலை செயலிழந்தது

காரணமாகச் செயலிழந்தன என்றார்.

இதனால், அந்த மின்னுற்பத்தி நிலையத்தில் உற்பத்திச் செய்யப்படும் 810 மெகாவோட் மின்சாரம், தேசிய மின்சார கட்டமைப்புக்குக் கிடைக்காமல் போயுள்ளதோடு, இந்நிலைமை காரணமாக, நாட்டின் அவசர மின் விநியோகச் செயற்பாடுகளில் தடங்கல்கள் ஏற்படக்கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், குறித்த மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள், வழமைக்குத் திரும்புவதற்கு நான்கு நாள்கள் செல்லும் என, மின்சார சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

# ஒரு மணிநேரம் மின்...

இரவு 8 மணி முதல் இரவு 9 மணிவரை, இரவு 9 மணி முதல் இரவு 10 மணிவரையிலும் பல பிரதேசங்களில் மின்சாரம் துண்டிக்கப்படும்.

மின் பிறப்பாக்க கட்டமைப்பில் மின்சார உற்பத்தி வழமைக்குத் திரும்பும் வரையிலும் நான்கு நாள்களுக்கு மாத்திரம் மின்சார விநியோகத்தைத் துண்டிக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

# 7 நாள்களுக்குள்...

குழுவே, மின் விநியோகம் தடைப்பட்டமை குறித்து ஆராய்ந்து 7 நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமெனத் தெரிவித்த மின்சக்தி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, அந்தக் குழுவின் முதற்கூட்டம், நேற்று (18) காலை 8.30 மணிக்கு நடைபெற்றது என்றார்.

இதேவேளை, மின் விநியோகம் துண்டிக்கப்பட்டமை தொடர்பில் 3 நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபையிடம் கோரியுள்ளதாகத் தெரிவித்த இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித்த குமாரசிங்க, இந்த விடயம் தொடர்பில், முழுமையான அறிக்கையை ஒரு மாதத்துக்குள் வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது என்றார்.

“தடைப்பட்ட மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்பினாலும், தொழில்நுட்பக் கோளாறு தொடர்பில் தொடர்ந்தும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன்றன” என அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதால், நீர் விநியோகத்துக்கும் இடையூறு ஏற்பட்டிருந்தது. அதனை வழமைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் நீர் விநியோகம் வழமைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனினும், நீர் விநியோகம் துண்டிக்கப்பட்ட பகுதிகளுக்கு பௌசர் மூலம் நீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அச்சபை தெரிவித்துள்ளது.

மின்பிறப்பாக்கி கட்டமைப்பில் நேற்று முன்தினம் (17) நண்பகல் 12.35 மணியளவில் கோளாறு ஏற்பட்டதைத் தொடர்ந்து, நாடளாவிய ரீதியில் மின் விநியோகம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2016ஆம் ஆண்டின் பின்னர் நாடளாவிய ரீதியில் முதன்முறையாக நேற்று முன்தினம் (17) மின்சார விநியோகத்துக்குத் தடை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வீதி அபிவிருத்தியை நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய...

அதற்காக, கன ரக இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் இயற்கை சுற்றாடல் அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

எனவே, இவ்விடயத்தில் அவதானம் செலுத்தி, காடழிப்பை தடுத்து நிறுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையிலே, அச்செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணித்துள்ளார்.



# நீரில் மூழ்கி இளைஞன் பலி

மஹேஸ் கீர்த்திரத்ன



இரதொட்டை- பம்பரகல்ல ஆற்றில் குளிப்பதற்காகச் சென்ற இளைஞரொருவர், நேற்று முன்தினம் (17) மாலை, நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் என்று, இரத்தொட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

அலவத்துகொடை பிரதேசத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் தினேஷ்குமார் (வயது 22) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர் நண்பர்களுடன் ஆற்றுக்குச் சென்றபோதே, இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளார்.

பிரதேச மக்கள், பொலிஸார் இணைந்து சடலத்தை மீட்டுள்ளதுடன், சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மாத்தளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புகைப்படக் கண்காட்சி

மலையக தமிழ் இளைஞர் யுவதிகளை தெரிவு செய்து அவர்களின் தொழில் துறை சார்ந்த திறனை ஊக்குவிக்கும் வகையில், முதன்முறையாக மலையக இளைஞர், யுவதிகளின் புகைப்பட கண்காட்சி ஒன்றை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நடத்தவுள்ளது.

தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோவில் மண்டபத்தில், எதிர்வரும் 23ஆம் திகதி இந்த புகைப்பட கண்காட்சி நடைபெறவுள்ளது.

தலவாக்கலை - ஹொலிரூட், லோகி தோட்டங்கங்களில் இருந்து தெரிவு செய்யப்பட் இளைஞர், யுவதிகளுக்கு புகைப்படக் கலை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் பயிற்சிகளை வழங்கியிருந்தது.

இந்தப் பயிற்சியில் கலந்துகொண்ட இளைஞர் யுவதிகளால் எடுக்கப்பட்டப்பட்ட புகைப்படங்கள் எதிர்வரும் 23ஆம் திகதி புகைப்படக் கண்காட்சியில் காட்சிப்படு த்தப்படவுள்ளன.

நியமனங்களை வழங்கும் விடயத்தில்

# ‘நியாயத்துடன் செயற்படவும்’

மஹேஸ் கீர்த்திரத்ன



அரச வேலைவாய்ப்புக்கான நியமனங்களை வழங்கும் விடயத்தில், ஜனாதிபதி மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு, நியாயத்துடன் செயற்படுவது அவசியம் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன வலியுறுத்தியுள்ளார்.

மாத்தளை- ஹபுகஸ்பிட்டிய பிரதேசத்தில், நேற்று முன்தினம் (17) நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்துரைத்த அவர்,

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின் போது, தேர்தல்கள் ஆணைக்குழுவால் இடைநிறுத்தப்பட்ட அனைத்து நியமனங்களையும் வழங்குவதற்கு, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

“50,000 பட்டதாரிகளுக்கான நியமனம், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 100,000 பேருக்கும் நியமனம், திட்ட உதவியாளர்களுக்கான நியமனம் என மூன்று பிரிவுகளில் நியமனங்கள் வழங்கப்படவிருந்தன. எனினும் அவற்றை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியது.

“2019 ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், திட்ட உதவியாளர் நியமனத்துக்காக விண்ணப்பதாரிகள் முறையாக அழைக்கப்பட்டதுடன், நேர்காணல்களும் நடைபெற்றன. எனினும் மேற்படி நியமனத்தை வழங்குவதைத் தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியது. இதனால் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருந்தவர்கள் ஏமாற்றப்பட்டனர். இடைநிறுத்தப்பட்ட நியமனத்தை வழங்குமாறு கோரி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோதும் அதனை யாரும் கண்டுகொள்ளவில்லை.

“இந்நிலையில் தேர்தல்கள் முடிவுற்ற நிலையில், மீண்டும் நியமனங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். ஆனால், திட்ட உதவியாளர்களுக்கான நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது முற்றிலும் தவறான விடயமாகும். பட்டதாரிகளுக்கும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேருக்கும் நியமனங்களை வழங்கும்போது, திட்ட உதவியாளர்களுக்கான நியமனத்தையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

“இவ்விடயம் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு, ஜனாதிபதி, ஜனாதிபதி செயலாளருடன் கதைத்துத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்” என்றும் அவர் வலியுறுத்தினார்.

# போலி இலக்க தகடுகளுடன் வாகனங்கள் மீட்பு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

போலி இலக்கத் தகடுகளுடன் இரண்டு வாகனங்களை, பலாங்கொடை - பின்னவல பொலிஸார், நேற்று முன்தினம் (18) கைப்பற்றியுள்ளனர்.

பலாங்கொடை பின்னவல பொலிஸ் பிரிவிலுள்ள வியாபார நிலையமொன்றிலிருந்து வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஜீப், லொறி ஆகிய இரு வாகனங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி வாகனங்களின் உரிமை யாளர்கள், வாகன இயந்திர அடிச் சட்ட இலக்கங்கள் மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்காக, மோட்டார் வாகனத் திணைக்களத்தின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மதுபாவனையை கட்டுப்படுத்துவதற்கான

# மூன்றாங்கட்ட செயலமர்வு

**பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டலில், தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் கீழ் இந்தச் செயலமர்வு நடத்தப்படுகிறது**
**செயலமர்வில் கண்டி, நுவரெலிய மாட்டச் செயலகங்களில் பணியாற்றும் 54 அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்**

ஷேன் செனெவிரட்ன

மாவட்ட மட்டத்தில் மதுபாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்துக்காக அதிகாரிகளைப் பயிற்றுவிப்பதற்கான செயலமர்வு, 3 ஆவது கட்டமாக, கண்டி மாவட்டச் செயலகத்தில், நேற்று (19) நடத்தப்பட்டது.

ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மதுவிலிருந்து விடுதலைபெற்ற நாடொன்றைக் கட்டியொழுப்பும் நோக்கில், இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டலில், தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் கீழ் இந்தச் செயலமர்வு நடத்தப்படுகிறது

செயலமர்வில் கண்டி, நுவரெலிய மாட்டச் செயலகங்களில் பணியாற்றும் 54 அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

கண்டி மாவட்டச் செயலாளர் திஸ்ஸ கருணாரட்ன தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில், கண்டி வைத்தியசாலையின் மனநல மருத்துவ நிபுணர் கிஹான் அபயவர்தன உள்ளிட்ட பலரும் விரிவுரையாற்றினர்.



# வருடாந்த உற்சவம்...

எம்.செல்வராஜா

ஹப்புத்தளை ஸ்ரீ சிவசுப்ரமணிய முன்னேஸ்வரர் கோவிலின் வருடாந்த உற்சவம், நேற்று (18) நடைபெற்றது. இதன்போது, காவடியாட்டம், பறவைக்காவடி என்பன இடம்பெற்றன.

விபத்தில் ஒருவர் பலி;

# சாரதி பிணையில் விடுவிப்பு




டி.சந்ரு

நுவரெலியா நகர் பஸ்தரிப்பிடத்துக்கு அருகில், நேற்று (17) முன்தினம் இடம்பெற்ற விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதியை, இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் செல்வதற்கு, நுவரெலியா மாவட்ட நீதவான் பிரமோத ஜயசேகர, நேற்று (18) உத்தரவிட்டார்.

மேற்படி பஸ்தரிப்பிடத்துக்கு அருகில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற விபத்தில், நுவரெலியா எல்பியன் தோட்டத்தைச் சேர்ந்த வி.சுதாகரன் (வயது 35) என்பவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

கொழும்பு நோக்கிப் பயணிப்பதற்கு தயார் நிலையிலிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸில் மோதுண்டு மேற்படி நபர் உயிரிழந்தார்.

இதனையடுத்து பஸ்ஸின் சாரதி நுவரெலியா பொலிஸில் சரணடைந்த நிலையில், அவரை கைதுசெய்த பொலிஸார் நேற்று (18) நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே நீதவான் இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சிறுநீரக நோய்க்கு எதிராக போராடிய

# பல்கலைக்கழக மாணவர் உயிரிழப்பு

இந்திக அருணகுமார

சிறுநீரக நோய்க்கு எதிராக போராடிவந்த ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீட மாணவரொருவர், சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் 4 ஆம் வருட கல்வியைத் தொடர்ந்த



நுவன் சேனநாயக்க (வயது 25) என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞரின் தாயாரும் சிறுநீரக நோயால் உயிரிழந்தமையால், பல்கலைக்கழத்தில் சிறுநீரக நோய் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டத்தில், மேற்படி மாணவர் மும்முரமாக ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையிலேயே அவரும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். மாத்தளை மாவட்டத்தில், சிறுநீரக நோயால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

போதைப்பொருள் தடுப்புப் பிரிவின்

# அதிகாரிகளின் விளக்கமறியல் நீடிப்பு

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் 13 பேருக்கு விதிக்கப்பட்டிருந்த விளக்கமறியல், இம்மாதம் 31ஆம் திகதி வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தங்களால் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களை மீண்டும் அவர்களுக்கே விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு விசாரணை, கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில், நேற்று (18) எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

எவ்வாறாயினும், கொரோனா வைரஸ் பரவலைக் கருத்திற்கொண்டு, மேற்படி வழக்கு விசாரணைகளில் சந்தேகநபர்கள் ஆஜர்படு த்தப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# மலையக ரயில் சேவை வழமைக்குத் திரும்பியது

சுதத் எச்.எம்.ஹேவா

பொடிமெனிக்கே புகையிரதம் தடம்புரண்டதால் தடைப்பட்டிருந்த மலையக ரயில் சேவைகள், நேற்று (18) மாலை வழமைக்குத் திரும்பியதாக, நாவலப்பிட்டி ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

நானுஓயாவிலிருந்து கொழும்பு புகையிரத நிலையத்தை நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற புகையிரதம், நேற்று(18) காலை 8.30 மணியளவில், வட்டவளை மற்றும் கலபொட ஆகிய புகையிரத நிலையங்களுக்கு இடையில் தடம்புரண்டமையால் மலையகத்துக்கான புகையிரத சேவை பாதிப்படைந்தது.

எனினும், நேற்று(18) மாலை ரயில் பாதை சீரமைக்கப்பட்டது.

பொலிஸ் நிலையங்களுக்குள் நெருக்கடி;

# அறிக்கை கோருகிறது பொலிஸ் ஆணைக்குழு

நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் பணியாற்றுகின்ற ஊழியர்கள் தொடர்பான அறிக்கையொன்றைக் கையளிக்குமாறு, பதில் பொலிஸ்மா அதிபரிடத்தில், தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிக்கையொன்றைக் கோரியுள்ளது.

ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் பணியாற்றுகின்ற, பணியாற்றுவதற்கு அவசியமான ஊழியர்களின் தொகை தொடர்பாகவே பொலிஸ் ஆணைக்குழு தகவல்களைக் கோரியுள்ளதாகக் கூறப்படுகிறது.

நாடு முழுவதிலும் 489 பொலிஸ் நிலையங்கள் காணப்படுவதுடன், அவற்றில் சில பொலிஸ் நிலையங்களுக்குள் தேவைக்கு அதிகமாக ஊழியர்கள் இருக்கின்ற போது, இன்னும் சில பொலிஸ் நிலையங்களில் போதியளவு ஊழியர்கள் இல்லையெனவும் கூறப்படுகிறது. மேற்படி பொலிஸ் நிலையங்களில் அதிகமான ஊழியர்கள் இருக்கின்ற போதும், அவர்களுக்கு உரிய பணிகள் கையளிக்கப்பட்டுள்ளனவெனவும், அவர்களில் சிலர் தமது சொந்த இடங்களில் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதனால் சில பொலிஸ் நிலையங்களில் வழமையான பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளதாகவும், அதனைக் கருத்தில்கொண்டே தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிக்கையொன்றை கோரியுள்ளதெனவும் கூறப்படுகிறது. அதன்படி இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பணிகளைப் பதில் பொலிஸ்மா அதிபரால் , சபரகமுவ பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் எல்.எஸ்.பதிநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.









# சான்றிதழ் வழங்கல்...

நியூ சிட்டி வேல்ட் கலெக்சன் பெஷன் எக்கடமியில் (New city world collection Fashion Academy) மூன்று மாதகால தையல் பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஆடை அலங்கார அணிவகுப்பு நிகழ்வும் லபுக்கலை முன்பள்ளியில் நடைபெற்றன.

இந்நிகழ்வில், தையல்கலை பயிற்றுநர் திருமதி க.கவிதா, ஹெப்பி ஹோம் பவுன்டேசனின் தலைவர் டொக்டர் பி.பெருமாள் ரவிந்திரன், டொக்டர் ஹரிசன் டேவ்ஸன், கொத்மலை பிரதேசத்துக்கான கிராமசேவகர் திருமதி பொன்னன் மல்லிகா ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.









# வருடாந்த திருவிழா

கண்டி-மடுல்கலை, மாவுசா மேற்பிரிவு தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் வருடாந்தத் திருவிழா, கரகம்பாலித்தலுடன் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து, பாற்குட பவனி, சுவாமி உள்வீதி வலம்வருதல், பூக்கரக நிகழ்வுகள் என்பன நடைபெற்றன. (மெய்யன்)









விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 19 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.